விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 018 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 22 செவ்வாய்க்கிழமை (06.01.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## வெடுக்குநாறிமலை ஆலய நிலம், பாதையை விடுவிக்குக

### வடக்கு ஆளுநருக்கு கடிதம்

(வவுனியா)

வவுனியா, நெடுங்கேணி, வெடுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்திற்கான நிலம் மற்றும் பாதையை விடுவித்து தருமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களுக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

04ஆம் பக்கம் பார்க்க

## ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கைது

(கொழும்பு)


முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

வாக்குமூலம் வழங்குவதற்காக அவர் நிதிக் குற்ற விசாரணைப் பிரிவில் நேற்றுக் காலை முன்னிலையான நிலையில், கைது செய்யப்பட்டுள்ளார்.

சதொச லொறியை தவறாகப் பயன்படுத்தி அரசுக்கு நிதி இழப்பை ஏற்படுத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டிலேயே முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவை

02ஆம் பக்கம் பார்க்க



### இலங்கை முழுவதையும் கட்டுப்படுத்துமளவுக்கு

# தமிழீழ விடுதலைப் புலிகள் பலமானவர்களாக இருந்தனர்

### இணையத்துக்கான செவ்வியில் பாட்டலி சம்பிக்க ரணவக்க



(கொழும்பு)

இலங்கை முழுவதையும் கட்டுப்படுத்துமளவுக்கு ஒரு காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் பலம் படைத்தவர்களாக இருந்தனர் என முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் விலைகளில் மாற்றம்

(கொழும்பு)

மாதாந்த எரிபொருள் திருத்த விலைகளை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்று வெளியிட்டுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

### கொழும்புத்துறையில்

## ஹெரோயினுடன் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் 4 கிராம் 90 மில்லிகிராம் ஹெரோயினுடன் சந்தேகநபர்கள் இருவர் நேற்றுக் கைது

15ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் ரஷ்ய முதலீட்டாளர்கள் முதலீடு செய்ய ஊக்குவிக்க வேண்டும்



### ரஷ்யத் தூதுவரிடம் வடக்கு ஆளுநர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் ரஷ்ய முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதை ஊக்குவிக்க வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் இலங்கைக்கான

15ஆம் பக்கம் பார்க்க

### நெடுந்தீவில் பாம்புக்கடிக்கிலக்கான பெண்

## உலங்குவானூர்தி மூலம் யாழ்.போதனாவில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு பிரதேசத்தில் பாம்புக்கடிக்குள்ளான ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக உலங்கு வானூர்தி மூலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று அனுமதிக்கப்பட்டார்.

நெடுந்தீவு 08ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அருள் ஞானசீலன் மேரி லூர்ட்ஸ் என்பவரே பாம்புக்கடிக்கு இலக்காகி உலங்குவானூர்தி

15ஆம் பக்கம் பார்க்க

### இன்று நள்ளிரவு முதல்

## உயர்தரப் பரீட்சைக்கான மேலதிக வகுப்புகளுக்குத் தடை

(கொழும்பு)

2025ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சையில் இன்னும் நடத்தப்படாத பாடங்களுக்கு மேலதிக வகுப்புகள் நடத்துவதற்கு இன்று செவ்வாய்க்கிழமை (06) நள்ளிரவு முதல் பரீட்சை நிறைவடையும் வரை தடை விதிக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன் கீழ் மேலதிக வகுப்புகள், பாடவாரியான

15ஆம் பக்கம் பார்க்க

## வங்காள விரிகுடாவில் தளம்பல்

### வடக்கில் மழை தொடரும்

(யாழ்ப்பாணம்)

வங்காளவிரிகுடாவில் தளம்பல் நிலை உருவாகி

02ஆம் பக்கம் பார்க்க

### தையிட்டிப் போராட்டம் தொடர்பாக

## கைதானவர்களுக்கு எதிரான வழக்கு நீதிமன்றால் ஒத்திவைப்பு



15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வங்காள...**

யுள்ளதால் வடக்கு உட்பட நாடு முழுவதும் மழை தொடரும் எனவளிமண்டலவியல் திணைக்களம் விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

இந்த அறிக்கை நேற்று (05) பிற்பகல் 3.30 மணிக்கு வெளியிடப்பட்டுள்ளது.

நாட்டிற்கு தென்கிழக்காக வங்காள விரிகுடா கடற்பரப்பில் நிலைகொண்டுள்ள வளிமண்டல கீழ்த்தளத் தளம்பல் நிலை மேலும் வலுவடைய வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக, ஜனவரி 8 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் நாட்டின் குறிப்பாக வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் மழை நிலைமை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

**ஜோன்...**

வத்தளை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது அவரை 9ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

முன்னர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் மகன் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


## பணிநிலை வேண்டுகை

யாழ் வணிகர் கழக அலுவலகத்திற்கு நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது. புரிந்துணர்வுடன் இணைந்து செயற்படக் கூடிய அரச நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற கணணி, ஆங்கில அறிவு, தொடர்பாடல் திறன் மற்றும் மும்மொழி ஆற்றல் உடையவராகவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

சுயவிபரங்களுடனான விண்ணப்பத்தினை நற்சான்றுப்படுத்தி 21.01.2026 ஆம் திகதிக்கு முன்னர் யாழ் வணிகர் கழக அலுவலகத்திற்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

முகவரி :- செயலாளர், யாழ் வணிகர் கழகம், இல.165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

WhatsApp: 076 575 4993

(C-4753)

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் வசாவிளான் பாடசாலை முன்பாக 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- இரண்டு பரப்பாகவும் ஒன்றரை பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- பலாலி வீதி 50m தூரம்
- வசாவிளான் மத்திய கல்லூரி 150m தூரம்
- நிலப்பரப்பு, செம்மண் தரை, நன்னீரூற்று
- 18 அடி பாதையுடன்

தொடர்புகளுக்கு:

**074 029 2338, 076 990 3039**

(1894)


## கிழவன்காடு கலாமன்றம்

**காரைநகர் - யாழ் கிளை நடாத்தும்**

**சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின்**

179 வது இசை ஆராதனை விழா

**அழைப்பிதழ்**

இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.

காலம் : 07.01.2026 புதன்கிழமை பி.ப 4.00 மணி

**நிகழ்ச்சிகள்**

- தியாகராஜ சுவாமிகள் அரங்கிற்கு எழுந்தருளல், தீபாராதனை
- தொடக்கவுரை :- **இசைக்கலைமணி. திருமதி. யசோதா ஸ்ரீகுமாரன்** (ஓய்வுநிலை இசை ஆசிரியர்)
- ஈழத்து பிரபல நாதஸ்வர, தவில் கலைஞர்கள் வழங்கும் **"மங்கள இசை"**
- ஈழத்து பிரபல கர்நாடக இசைக் கலைஞர்கள் மற்றும் வாத்தியக் கலைஞர்கள் இணைந்து வழங்கும் **"இசை ஆராதனை"**
- தியாகராஜ சுவாமிகள் அருளிய கீர்த்தனைகளில் ஒவ்வொரு கீர்த்தனை வீதம் விரும்பிய கலைஞர்கள் தனியாக அல்லது குழுவாக இணைந்து வழங்கல்.

குறிப்பு


- நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை கலாமன்ற யாழ். கிளையிலிருந்து பி.ப 3.30 மணிக்கு ஆரம்பமாகும். (இல.428, K.K.S வீதி, யாழ்ப்பாணம், யாழ். வண்ணை சிவன் கோவில் அருகாமை)
- மங்கள இசை, இசை ஆராதனையில் பங்குகொள்ள ஆர்வமும் விருப்பமும் உள்ள கலைஞர்கள் இணைந்து கொள்ளலாம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**கிழவன்காடு கலாமன்றம்**

காரைநகர் - யாழ் கிளை (C-4754)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அன்னை மடியில் 27 . 11 . 1943

ஆண்டவன் அடியில் 09 . 12 . 2025

ஏங்கள் வாழ்வின் வழிகாட்டியும் எமது குலவிளக்குமாகிய

## அமரர் சுப்பன் சுந்தரன்

எமது அன்புத் தந்தையார் அவர்கள், கடந்த 09.12.2025 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார் என்ற செய்தியறிந்து, எமது இல்லத்திற்கு நேரில் வந்து எமது துயரத்தில் பங்குபற்றிய அன்பு உறவுகளுக்கும், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்தத் துயரகாலம் முழுவதும் எம்முடன் தோளோடுதோள் நின்று எங்களை ஆற்றுப்படுத்தியவர்களுக்கும், இறுதி ஊர்வலம் மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், கண்ணீரஞ்சலித் துண்டுப்பிரசுரங்கள், பதாதைகள் மூலம் மரியாதை செய்தவர்களுக்கும், புலம்பெயர் நாடுகளிலிருந்து தொலைபேசி மற்றும் சமூக ஊடகங்கள் வழியாக ஆறுதல் கூறிய உறவுகள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை சிரம் தாழ்த்தித் தெரிவித்துக்கொள்கிறோம்.

உற்றார், உறவினர், நண்பர்களுக்கு தனித்தனியே நன்றிகளோ அல்லது தகவலோ தெரிவிக்கத் தவறி இருந்தால், அதற்காக மன்னிப்பு வேண்டி மீண்டும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு,

நாளை 07.01.2026 புதன்கிழமை காலை 6.30 மணியளவில் புலோலி வடமேற்கு முருகன் கோவிலடியில் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெற்று அஸ்தியானது கீரிமலை புனித தீர்த்தக் கரையில் கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் சபிண்டிகரண கிரியைகள் நடைபெறும். மறுநாள் 08.01.2026 வியாழக்கிழமை அன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசன நிகழ்வில் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.

நன்றி!

முருகன் கோவிலடி,
புலோலி வடமேற்கு, புலோலி.

தகவல்: குடும்பத்தினர்

(C-4755)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி விஞ்ஞான பாட ஆசிரியை **திருமதி சிவதர்சினி சிவரூபன்** அவர்களின் அன்புத் தாயார்

## இராஜேஸ்வரி ஜீவரத்தினம்

அவர்கள் 03.01.2026 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


பிரிவுத்துயரில் பங்கு கொள்ளும்

**கல்லூரிச் சமூகம்**

**யா/யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.**

(C-4759)

## 17ம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் நல்லையா தவகுலசிங்கம்

அன்னை மடியில் 25.02.1947

ஆண்டவன் அடியில் 16.12.2008

பாரினிலே பலரும்
போற்ற வாழ்ந்த
பெருமைக்குரிய தந்தையே!
எங்களை விட்டுப் பிரிந்து
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள்
மாறாது...

(1891)

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கையில் பௌத்தத்திற்கே முன்னுரிமை

# திஸ்ஸ விகாரையை இடித்தழிக்க இடமளியோம்!

## மொட்டு திட்டவட்டம்

**(கொழும்பு)**

**யாழ். தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற்ற ஒருபோதும் இடமளியோம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஜானக வக்கும்புர தெரிவித்தார்.**

அதேவேளை, திஸ்ஸ விகாரையைச் சுற்றியுள்ள காணிகள் விகாரைக்குச் சொந்தமானவை என்றும், அந்தக் காணிகளை விடுவிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

தையிட்டியில் திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளில் விகாரை அமைந்துள்ள காணியைத் தவிர ஏனைய காணிகளை கட்டம் கட்டமாக விடுவிக்கப்படும் என்று காணி உரிமையாளர்களுடன் அண்மையில் நடத்திய கலந்துரையாடலின் போது யாழ்ப்பாணம் மாவட்ட செயலர் உறுதியளித்திருந்தார்.

எனினும், இது தங்கள் போராட்டத்தை மலினப்படுத்தித் தங்களை ஏமாற்றும் அரசின் திட்டம் என்றும், காணிகளை முழுமையாக விடுவிக்கும் வரை தங்கள் போராட்டம் தொடரும் என்றும் கடந்த சனிக்கிழமை தையிட்டியில் நடைபெற்ற போராட்டத்தின்போது காணி உரிமையாளர்கள் தெரிவித்திருந்தார்கள்.

அதேவேளை, மக்களின் காணிகளை மக்களிடம் ஒப்படைப்பதில் எதற்காக கட்டம் கட்டமான நடவடிக்கை இடம்பெற வேண்டும்? என்று கேள்வி எழுப்பியிருந்த நயினாதீவு நாக விகாரையின் விகாராதிபதி நவதகல பதும கீர்த்தி திஸ்ஸ, திஸ்ஸ விகாரை அமைந்துள்ள ஒரு குறிப்பிட்ட மிகச் சிறிய பகுதியை எடுத்துக்கொண்டு ஏனைய பகுதிகள் அனைத்தும் ஒரே தடவையில் உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும், மக்களை ஏமாற்ற வேண்டாம் என்றும் வலியுறுத்தியிருந்தார்.

இது தொடர்பில் கருத்துரைக்கும் போதே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கியஸ்தரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான ஜானக வக்கும்பர மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "இந்த நாட்டில் பௌத்த மதத்துக்கே முன்னுரிமை என்பது தமிழ் மக்களுக்கும், தமிழ் அரசியல்வாதிகளுக்கும் தெரியாதா? தையிட்டி திஸ்ஸ விகாரையில் எவரும் கை வைக்க முடியாது.

அதை அகற்ற ஒருபோதும் இடமளியோம். திஸ்ஸ விகாரையைச் சுற்றியுள்ள காணிகள் விகாரைக்குச் சொந்தமானவை. அந்தக் காணிகளை அரசு விடுவிக்கக்கூடாது.

அதேவேளை, தையிட்டி விகாரை விடயம் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் உள்ள விகாராதிபதிகள் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வர வேண்டும். அவர்கள் தனிப்பட்ட ரீதியில் கருத்துக்களை வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டும்." என அவர் தெரிவித்தார். (நி)

# மாணவர்களின் இணையப்பயன்பாடு கட்டுப்படுத்த 'டிஜிற்றல் செயலணி'

(கொழும்பு)

கல்வி அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட சில பாடத் திட்டங்கள் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சைகளுக்கு மத்தியில், மாணவர்களுக்கான பாதுகாப்பான இணையவழி வழிகாட்டல்களைத் தீர்மானிக்க "டிஜிற்றல் செயலணி" ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகப் பிரதமர் ஹரிணி அமரசூரிய அறிவித்துள்ளார்.



அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். தொழில் நுட்பத்திலிருந்து குழந்தைகளை முழுமையாகப் பிரித்துவிட முடியாது என்பதால், அவர்களுக்குப் பொருத்தமான இணையச் செயற்பாடுகள் அறிமுகப்படுத்தப்படும். இதற்கான வழிகாட்டல்கள் இந்த ஆண்டின் நடுப்பகுதியில் வெளியிடப்படும் என அவர் குறிப்பிட்டார்.

மேலும் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட இணையத் தளங்கள் மற்றும் இணைப்புகளை மட்டுமே மாணவர்கள் அணுகும் வகையில் இது அமையும் என அவர் கூறினார். அத்துடன் புதிய சீர்திருத்தங்களின் கீழ், சுயகற்றல் தொகுதிகள் ஊக்குவிக்கப்படும்.

இனி ஆண்டு இறுதிப் பரீட்சைகளுக்குப் பதிலாக, தொடர்ச்சியான மதிப்பீட்டு முறைகள் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# ஊழியர் சேமலாப நிதியை செலுத்துவதில் தவறிழைத்தால் கடும் நடவடிக்கை

## தொழில் அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் ஊழியர் சேமலாப நிதி பங்களிப்புகளைச் சரியாகச் செலுத்தாத நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கைகளை தீவிரப் படுத்தியுள்ளதாகத் தொழில் அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்காகத் தொழிலாளர் துறையின் இணையவழி முறைப்பாட்டு மேலாண்மை அமைப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தொழில் அமைச்சின் செயலாளர் எஸ்.எம். பியதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார். இதன்படி ஊழியர்கள் தற்போது தொழிலாளர் துறையின் அதிகாரப்பூர்வ இணையத்தளம் வாயிலாக நேரடியாக முறைப்பாடுகளைப் பதிவு செய்யலாம்.

இதற்கமைய தொடர்பு விபரங்களை வழங்கும் நபர்களுக்கு, சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து உடனுக்குடன் அறிவிக்கப்படும் என ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தநிலையில் தவறிழைக்கும் நிறுவனங்களுக்கு முதலில் முறையான அறிவித்தல் அனுப்பப்படுவதுடன், பின்னர் நிறுவனப் பிரதிநிதிகளுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தி, நிலுவைத் தொகையை மீட்க அதிகாரிகள் முயற்சிப்பார்கள் என தொழில் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். இதற்குப் பின்னரும் நிறுவனங்கள் நிதி செலுத்தத் தவறினால், சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அபராதத்துடன் கூடிய நிலுவைத் தொகை வசூலிக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

2015 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை 22 ஆயிரத்து 450 நிறுவனங்கள் ஊழியர் சேமலாப நிதியைச் செலுத்துவதில் தவறிழைத்துள்ளதாக நிதி அமைச்சு பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இவற்றின் மொத்த நிலுவைத் தொகை சுமார் 3 ஆயிரத்து 498 கோடி ரூபாய்க்கும் (ரூ. 34,989,162,957.81) அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது. 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இது, இலங்கையின் மிகப்பெரிய சமூகப் பாதுகாப்புத் திட்டமாகும்.

சட்டத்தின்படி, ஊழியர்கள் தங்கள் மாத வருமானத்தில் குறைந்தபட்சம் 8% பங்களிக்க வேண்டும், அதேவேளை முதலாளிகள் 12% பங்களிக்க வேண்டும். 2024 இறுதி நிலவரப்படி, இந்த நிதியத்தின் சொத்துமதிப்பு 4.4 டிரில்லியன் ரூபாய் ஆகும். ஓய்வூதியக் கால ஆதரவு மட்டுமன்றி, வீட்டுக்கடன் உத்தரவாதம், மருத்துவம் மற்றும் வீட்டுத் தேவைகளுக்காக ஒரு பகுதியைத் திரும்பப் பெறும் வசதிகளையும் இது வழங்குகின்றது. (நி)

# வெனிசுவேலாவில் பதற்றம் தங்கத்தின் விலையில் மாற்றம்

(கொழும்பு)

வெனிசுவேலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவை அமெரிக்கா சிறைப்பிடித்ததை தொடர்ந்து புவிசார் அரசியல் பதற்றங்கள் தொடர்பான முதலீட்டாளர்களின் கவலைகளினால் தங்கத்தின் விலை அதிகரித்துள்ளது.

அதன்படி, ஆசிய சந்தையில் நேற்றுத் திங்கட்கிழமை காலை தங்கம் ஒரு அவுன்ஸ் சுமார் 1.8 சதவீதம் அதிகரித்து சுமார் $4,408 (£3,282) ஆக இருந்தது. அதேவேளை, "பாதுகாப்பான முதலீடு" சொத்துக்கள் எனக் கருதப்படும் சொத்துகளுக்குள் முதலீடு மாற்றப்பட்டதையடுத்து, வெள்ளியின் விலை சுமார் 3.5 சதவீதம் அதிகரித்தது. 2025 ஆம் ஆண்டு வரலாறு காணாத அளவில் தங்கம் மற்றும் வெள்ளி விலைகள் அதிகரித்து. பின்னர் ஆண்டு இறுதியில் சில நாட்களில் விலைகள் குறைந்தன.

அதன்படி, கடந்த ஆண்டு இறுதியில் விலை குறைந்த போதிலும், தங்கம் 1979 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அதன் சிறந்த வருடாந்திர செயற்திறனைக் கண்டது.

டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி அன்று 60%இற்கும் அதிகமாக அதிகரித்தது. இதுவரை இல்லாத அவுன்ஸ் விலை 4,549.71 அமெரிக்க டொலர்களாக அதிகரித்தது.

வட்டி விகிதக் குறைப்புகளுக்கான எதிர்பார்ப்புகள், மத்திய வங்கிகளால் பெரிய அளவில் தங்கத்தை வாங்குவது மற்றும் உலகளாவிய பதற்றங்கள் மற்றும் பொருளாதார ஸ்திரமற்ற தன்மை குறித்த முதலீட்டாளர்களின் கவலைகள் உள்ளிட்ட பல காரணிகளால் இந்த இலாபங்கள் உந்தப்பட்டன.

இலங்கையில் நேற்று 24 கரட் தங்கம் ஒரு பவுணின் விலையானது 359,000 ரூபாவாக காணப்பட்டதுடன் 22 கரட் தங்கத்தின் விலையானது 332,200 ரூபாவாக காணப்படுவதாக அகில இலங்கை நகைகள் விற்பனையாளர் சங்கப் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் றோட்டறிக் கழகத்தால்
## பேரிடரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி




(யாழ்ப்பாணம்)

டித்வா புயலினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டம் கரைத்துறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த செம்மலை கிழக்கு (நாயாறு)கிராமசேவகர் பிரிவில் வசிக்கும் 113 குடும்பங்களுக்கு நல்லூர் றோட்டறிக் கழகத்தின் ஏற்பாட்டில் மனிதநேயர் திரு.த.ரமேஷின் அனுசரணையில் செம்மலை கிழக்கு கிராமசேவையாளர், கிராம அபிவிருத்திச் சங்கம், பெண்கள் கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் சக்தி விளையாட்டுக் கழகத்தின் வேண்டுகோளுக்கு ஏற்ப நாயாறு புனித சூசையப்பர் ஆலயத்தில் ரூபாய் 5000/= பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் நல்லூர் றோட்டறிக் கழகத்தினால் வழங்கப்பட்டது.

இதில் அனுசரணையாளர் திரு.த. ரமேஷ், ஆலய பங்குத்தந்தை அருட் திரு.எமில் போல், நல்லூர் றோட்டறிக் கழகத்தின் தலைவர் Rtn.அ.டிக்சன், முன்னாள் தலைவர் Rtn.த.கபிலன், முன்னாள் தலைவர் டாக்டர் Rtn.ம. பிரதீபன், முன்னாள் தலைவர் Rtn. ந.சுகந்தன், முன்னாள் தலைவர் Rtn.த.றவினதாஸ், நல்லூர் றோட்டறிக் கழகத்தின் அங்கத்தவர் Rtn. செ.ஆனந்தகுமார், செம்மலை கிழக்கு கிராம சேவையாளர் திருமதி.யூலியற் துசானா, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.எஸ்.பிரதீபா மற்றும் கிராம அபிவிருத்தி சங்க அங்கத்தவர்கள், பெண்கள் கிராம அபிவிருத்தி சங்க அங்கத்தவர்கள் மற்றும் சக்தி விளையாட்டுக் கழக அங்கத்தவர்கள் எனப் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (ம-7)

# தேசிய மட்ட சதுரங்க போட்டியில் கொக்குவில் மாணவி முதலிடம்!



இளையோருக்கான தேசிய மட்ட சதுரங்கப் போட்டியில் கொக்குவில் இந்துக் ஆரம்ப பாடசாலை மாணவி அக்சரா சனோஜன் முதலாமிடத்தைப் பெற்றுள்ளார்.

மாகாணங்களுக்கு இடையிலான இளையோருக்கான தேசிய மட்ட சதுரங்க போட்டி கொழும்பு பன்னிப்பிட்டிய மகா வித்தியாலயத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் 7 வயதிற்குட்பட்டோருக்கான பெண்களுக்கான போட்டியில் வட மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை மாணவி அக்சரா சனோஜன் முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டுள்ளார். (3-90)

## தமிழீழ...

இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே இதனைத் தெரிவித்திருந்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து இலங்கை இராணுவத்தை யாழ்ப்பாணத்திலிருந்து காப்பாற்றிக் கொண்டு வருவதற்கு இந்தியாவிடம் கப்பல் தருமாறு கேட்டிருந்தார்.

ஒரு காலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அப்படியொரு சக்தி வாய்ந்தவர்களாக இருந்தனர்.

இலங்கை முழுவதும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வருவதற்கான சந்தர்ப்பம் அன்று காணப்பட்டது.

ஆனால் இன்று சிலர் அதை மறந்து விட்டனர். தமிழீழ விடுதலைப் புலிகள் ஆனையிறவைக் கைப்பற்றி கொழும்பில் குண்டுகளை வெடிக்க வைத்துக் கொண்டு இலங்கை முழுவதையும் கைப்பற்றும் இறுதிக் கட்டம் வரை வந்தனர்.

2000ஆம் ஆண்டு சர்வதேச ஊடகங்கள் இலங்கைக்கு வந்தது. ஏனென்றால் புதிய நூற்றாண்டின் ஆரம்பத்தில் மலரும் புதிய தேசம் அதாவது தமிழீழம் தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதற்காக.

அவ்வாறான நிலையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இலங்கை இராணுவத்தை யாழ்ப்பாணத்திலிருந்து காப்பாற்றிக் கொண்டு வருவதற்கு இந்தியாவிடம் கப்பல் கேட்டிருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவரை அரசியல் ரீதியில் தோற்கடிக்க சந்திரிகா பல வியூகங்களை வகுத்தார்.

அரசியல் பரவலாக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அதிகாரத்தை வழங்கி சர்வதேச ரீதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவரை முடக்குவதற்கான திட்டத்தை சந்திரிகா முன்னெடுத்தார்.

ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகளின் தொடரான யுத்த வெற்றியில் அவை தோற்கடிக்கப்பட்டது எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-7)


# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை

**இயக்கச்சி சந்தைக் கடைத் தொகுதியிலுள்ள கடை இல PS-09 கடையை 01.02.2026 ஆம் திகதி தொடக்கம் 31.12.2026 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் -2026**

| | | |
|---|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி | :- | 06.01.2026 தொடக்கம் 19.01.2026 வரை (அலுவலக நேரம் ) |
| கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி | :- | 20.01.2026 பிற்பகல் 2 மணி |
| கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி | :- | 20.01.2026 பிற்பகல் 2 மணி |
| கேள்வி திறக்கப்படும் இடம் | :- | பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம் |

**இயக்கச்சி சந்தைத்தொகுதி கடைக்கான கேள்வி அட்டவணை**

| இல | கடை இலக்கம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கப்பட கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. | PS - 09 | 34,800.00 | 5,000.00 | 2,000.00 |

நிபந்தனைகள்:-

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும் என்பதுடன் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை "தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை பளை" என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி" என்ற முகவரிக்கு 20.01.2026 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும் என்பதுடன் ஏற்கனவே பிரதேசசபையின் அறைவாடகை கடைகளை நீண்டகால குத்தகைக்கு பெற்றவர்கள் விண்ணப்பிக்கமுடியாது.
05. அரச உத்தியோகத்தர்கள் கடைகளைப் பெற்றுக்கொள்ளமுடியாது.
06. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித்தொகையின் 1/3 பங்கு பணத்தை முழுமையாக அன்றைய தினமே செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும். மிகுதித் தொகையினை 07 பகுதியாகப் பிரித்து ஒவ்வொரு மாதக்கட்டணமாக அடுத்த மாதம் 05ஆம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளவேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான மாதக்கட்டணத்துடன் மாதாந்தக் கட்டணத்தின் 10% தண்டமாக அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.
07. சித்திகர குத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
08. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
09. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளருக்கு உண்டு.
10. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

திரு.சுப்பிரமணியம் சுரேன்,
தவிசாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை. (C-4752) 06.01.2026.


## வெடுக்குநாறி..

நேற்று திகதியிட்டு குறித்த கடிதம் ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வவுனியா மாவட்டத்தின் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வரலாற்றுத் தொன்மைமிக்க வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் வழிபாட்டு செயற்பாடுகளுக்காக ஆலயம் அமைந்துள்ள பகுதியின் ஒரு ஏக்கர் காணியினை ஆலயத்திற்கு விடுவித்துத் தர ஆவன செய்யுமாறு ஆலய அறங்காவலர் சபையினர் என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பிலான கோரிக்கையினை ஏற்கனவே தங்களுக்கு தாம் விடுத்துள்ளதாகவும், எனினும் எதுவித திருப்திகரமான பதிலும் தமக்கு இதுவரை கிடைக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், குறித்த ஆலயத்திற்குச் செல்லும் பாதையினை வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு விடுவித்துத் தரும் பட்சத்தில் குறித்த பாதையினைத் தம்மால் புனரமைக்க முடியுமென வவுனியா வடக்கு பிரதேச சபையினரும் தெரிவித்துள்ளனர்.

எனவே, தாங்கள் இவ்விடயத்தில் நேரடியாகத் தலையீடு செய்து குறித்த வரலாற்றுத் தொன்மைமிக்க ஆலயத் திற்கான காணி மற்றும் பாதையினை மிக விரைவாக விடுவித்துத்தர ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன் என அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7,250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் தலையெழுத்தை மாற்ற எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவு அவசியம்

## அழைப்பு விடுக்கும் நாமல்

(கொழும்பு)

நாட்டின் தலைவிதியை மாற்றியமைக்க வேண்டுமானால், எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்த ஒரு கூட்டணியை உருவாக்குவதே ஒரே வழி என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

"அரசியல் கட்சிகள் பிளவுபட்டு நாட்டை பலவீனப்படுத்துவதை விட, அவை ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதை தனது தந்தை (மஹிந்த ராஜபக்ச) எப்போதும் நம்பினார்," என நாமல் குறிப்பிட்டார்.

இதன்படி ஐக்கிய தேசியக் கட்சியும் , ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றிணைவதற்கு எடுக்கும் முயற்சிகளை வரவேற்பதாகத் தெரிவித்த அவர், இரு கட்சிகளும் ஒன்றிணைய வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

நாட்டின் நலனைக் கருத்திற்கொண்டு அனைத்து எதிர்க்கட்சிகளும் ஓரணியில் திரள வேண்டும் என்பதில் தான் உறுதியாக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

# வெளிநாட்டு பணவனுப்பல்கள் அதிகரித்த ஆண்டாக 2025 பதிவு

(கொழும்பு)

2016 ஆம் ஆண்டுக்குப் பின்னர், இலங்கைக்கு அதிக வெளிநாட்டு பணம் அனுப்பப்பட்ட ஆண்டாக 2025 ஆம் ஆண்டு மாறியுள்ளதாக வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அதன்படி, கடந்த ஆண்டில் 7.8 பில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியாளர் சந்திப்பின் போது அவர் தெரிவித்தார்.

இது 2016 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட முந்தைய உச்சமான 7.4 பில்லியன் அமெரிக்க டொலர்களை விட அதிகமாகும். (நி)

# தேங்காய் எண்ணெய் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

சந்தையில் கடந்த இரண்டு வாரங்களில், தேங்காய் எண்ணெய் போத்தலின் விலை சுமார் 100 ரூபாவால் அதிகரித்துள்ளதாக தேசிய நுகர்வோர் முன்னணி தெரிவித்துள்ளது.

அதேநேரம், மரக்கறி எண்ணெயின் விலையும் அதிகரித்துள்ளதாக அதன் தலைவர் அசேல சம்பத் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# கட்டுப்பாட்டை இழந்த கார் பற்றைக்குள் புகுந்தது



(புத்தளம்)

வீதியில் பயணித்துக்கொண்டிருந்த கார் கட்டுப்பாட்டை இழந்ததில் அருகிலிருந்த பற்றைக்குள் புகுந்து விபத்திற்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து குருநாகல் - புத்தளம் வீதியின் பதெனிய சந்திக்கு அருகிலுள்ள மரகஸ்கொல்ல பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

குறித்த வீதியில் பயணித்துக்கொண்டிருந்த கார் சாரதியின் கட்டுப்பாட்டையிழந்ததால் அருகிலிருந்த பற்றைக்குள் புகுந்துள்ளது.

பற்றைக்குள் புகுந்ததில் அங்கிருந்த மரக்கிளைகள் கார் மீது முறிந்து விழுந்துள்ளது. விபத்தில் உயிர் சேதம் குறித்து தகவல் வெளியாகவில்லை.

எனினும் கார் பலத்த சேதமடைந்துள்ளதாகத் தெரியவருகின்றது. விபத்து தொடர்பான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி)


## INVITATION FOR BID 2026 STAGE I VALIKAMAM NORTH PRADESHIYA SABHA, KANKESANTHURAI (Kollankaladdy)

1. The **Chairman, Local Authority Procurement Committee** on behalf of the **Chairman, Valikamam North Pradeshiya Sabha, Kanke santhurai(Kollankaladdy)** now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below. **"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987."**
4. Qualification' requirements are indicated in section 4 of the **Bidding document**. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 1 Documents
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the bidding documents at the same place on any working days from **2026.01.06 To 2026.01.20** in between 09:00 hrs and 15:00 hrs.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai (Kollankaladdy) (T.P:021 224 1130, Fax:021 224 3688) from 09:00 hrs to 15:00 hrs. during the period from 2026.01.06 To 2026.01.20 upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Local Authority Procurement Committee, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai (Kollankaladdy) on or before 10.30 a.m at 2026.01.21** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai(Kollankaladdy).** commencing at **10.30 AM on 2026.01.12**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | Document Issuing/Purchasing Period | | | From 2026.01.06 To 2026.01.20 | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | 2026.01.12 at 10.30 AM | | | | |
| | Closing and Opening of Bids | | | 2026.01.21 at 10.30 AM | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/14/41/(14)/ 05/01/506/PSDG (SD)-01/2026 | Construction of Sub Office Building at Myliddy. (Stage III) | 14.63 | 120 | C7 or above (Building) | 5000.00 | 147,000.00 | 06/05/2026 | 08/04/2026 |

**Chairman,**
**Local Authority Procurement Committee,**
**Valikamam North Pradeshiya Sabha,**
**Kankesanthurai(Kollankaladdy).**
**06.01.2026**

(C-4750)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினால் நடத்தப்படும் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் புண்ணியநாச்சி அம்மையார் குருபூசை தினத்தின் சார்பாக நடத்தப்படும் பண்ணிசை போட்டி, திருக்குறள் மனனப் போட்டி, என்பன பாடசாலை மாணவர்களிடையே எதிர்வரும் 08.02.2026 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

திருக்குறள் மனனப் போட்டியில் கீழ்ப்பிரிவு- முதல் ஐந்து அதிகாரங்கள், மத்திய பிரிவு- முதல் பத்து அதிகாரங்கள், மேற்பிரிவு- முதல் பதினைந்து அதிகாரங்க்ள். பங்குபற்ற ஆர்வமுள்ள மாணவர்கள் பாடசாலை அதிபர் ஊடாக விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 7678 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ள முடியும் என யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் செயலாளர் அறிவித்துள்ளார். (8)

# கண்டாவளை பிரதேச செயலகத்தின் நடமாடும் சேவை

(கண்டாவளை)



ஜனாதிபதி செயலகத்தின் வழிகாட்டலில் கிளீன் ஸ்ரீலங்கா நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவின் இரண்டாவது நடமாடும் சேவை கடந்த2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கண்டாவளை பிரதேச செயலாளர் த.பிருந்தாகரன் தலைமையில் கல்லாறு தமிழ் வித்தியால யத்தில் நடைபெற்றது.

இந் நடமாடும் சேவையில் பிறப்பு, இறப்பு மற்றும் உத்தேச வயது சான்றிதழ்கள் தொடர்பான சேவைகள், ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களத்தினால் வழங்கப்படும் சேவைகள் (தேசிய அடையாள அட்டை), ஓய்வூதியம் தொடர்பான சேவைகள், போன்ற பல்வேறு சேவைகள் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர், வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், கரைச்சி பிரதேச சபை தவிசாளர், கண்டாவளை பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், நடமாடும் சேவையுடன் தொடர்புடைய திணைக்கள தலைவர்கள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (8-315-316)

# அலங்கார உற்சவம்

(கரணவாய்)


துன்னாலை வடக்கு நவிட்டான்பதி மனோன்மணி சக்தி சமேத காளிகாம்பாள் தேவஸ்தான அலங்கார உற்சவம் எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெற உள்ளன. அவ் உற்சவங்களில் எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத் திருவிழாவும், 17ஆம் திகதி சனிக் கிழமை இரதோற்சவமும், 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்த உற் சவம் இடம் பெறவுள்ளது. (8-60)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | வவுனியா | மட்டுவில் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 600 | 850 | 700 | 500-700 | 600 | 450 | 500 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 200 | -- | 200 | -- | -- |
| பச்சைமிளகாய் | 1400 | 1200 | 1200 | 900-1000 | 1000 | 900 | 1000 |
| தக்காளி | 600 | 600 | 500 | 450 | 600 | 400 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 150-180 | 150 | 90 | 150 |
| கோவா | 300 | 300 | 350 | 300 | 300 | 270 | -- |
| கரட் | 600 | 520 | 600 | 350 | 600 | 430 | 500 |
| பூசணி | 160 | 150 | 120 | 150 | 200 | 140 | -- |
| புடோல் | 400 | 400 | 300 | 400 | 300 | 275 | 300 |
| வாழைக்காய் | 100 | 140 | 120 | 80-130 | 200 | 180 | 120 |
| சின்ன வெங்காயம் | 300 | 300 | 300 | 200-350 | 400 | 350 | 200 |
| பெரிய வெங்காயம் | 250 | 240 | 200 | -- | 200 | -- | 200 |
| பாகற்காய் | 800 | 800 | 600 | 800 | 1000 | 500 | 600 |
| வெண்டக்காய் | 400 | 300 | 200 | 250-300 | 400 | 250 | 200 |
| கருணைக் கிழங்கு | 350 | 280 | 300 | 300 | 350 | 300 | -- |
| பயற்றங்காய் | 600 | 650 | 700 | 500-700 | 600 | 200 | 450 |
| லீக்ஸ் | 500 | 550 | 600 | 350 | 800 | 430 | -- |
| பீற்றூட் | 800 | 650 | 1000 | 550 | 800 | 650 | 800 |
| கறிமிளகாய் | 1000 | 1200 | 1000 | 1100 | 1200 | 1500 | 900 |
| முருங்கைக்காய் | 1800 | -- | 2000 | 2000 | -- | -- | -- |
| போஞ்சி | 800 | 600 | 800 | 600 | 600 | 400 | 550 |
| கத்தரிதம்புள்ள | 400 | 600 | 600 | -- | 500 | -- | -- |
| கீரை - 1 பிடி | 100 | 60-140 | 200 | 180 | 140 | 170 | -- |
| தேசிக்காய் | 500 | 600 | 400 | 150-200 | 250 | 140 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 200 | 150 | 80-160 | 120-180 | 120 | -- |
| இராசவள்ளி | 600 | 700 | 500 | 480 | 500 | 475 | -- |
| வெங்காயப்பூ | 800 | 1000 | 1000 | 700 | 1000 | -- | -- |
| முள்ளங்கி | 200 | 200 | 200 | 120 | 250 | 200 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 150 | -- | 100 | 50 | -- |
| வல்லாரை | 80 | 70 | 100 | -- | 150 | 50 | -- |
| ஈரப்பலா | 100 | 150 | 100 | 50-80 | 150 | 80 | -- |

# நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்




இது ஒரு முதுமொழி. ஆனால் நாம் முற்றாக மறந்துவிட்ட பழமொழி. மனித வாழ்க்கையில் நாம் எமது உடல் வளர்ச்சி நிலையில் ஐந்து படிநிலைகளை எதிர்கொள்ள வேண்டும் என முன்னோர் கூறியுள்ளனர். அவற்றை நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடு என நிரல், நிறைப்படுத்திப் பல பதிவுகளையும் செய்துள்ளனர்.

மனிதருடைய வாழ்நாளில் இப்பருவ நிலையான வளர்ச்சியை மிகத் துல்லியமாகத் தெரிவிக் கும் மாற்றங்களையும் எதிர்கொள்ளத் திட்டமிட்டு வாழ்வை நடத்தினர்.

வாய்மொழி மூலமும் பண்பாட்டு நடைமுறைகள் மூலமாகவும் தமது தலைமுறைக் கையளிப்பையும் செய்திருந்தனர்.

ஆனால் இன்று நிலைமை பெரிதும் மாற்றம் அடைந்துவிட்டது. மக்களின் வாழ்வியலில் இன்றியமையாத தளங்களான உணவு, உடை, உறையுள் என்பனவற்றில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த மாற்றத்திற்கான காரணமாக உலகமயமாதல் என்ற கோட்பாடு முன்வைக்கப் பட்டுள்ளது ஆனால் இந்த மாற்றங்களால் மக்களுடைய உடல், உள நலம் சீர்கெட்டிருப்பதைப் பலர் உணராமல் உள்ளனர் என்பதே உண்மை. எனவே மக்களுக்கு ஏற்பட்டுள்ள இத்தகைய நலக் குறைவைப் போக்குவதற்குரிய வழியைத் தேட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வேளையில் தடம்மாறி நிற்கும் மக்களின் வாழ்வியல் தடத்தை நெறிப்படுத்த வேண்டி சில ஆற்றுப்படுத்தும் பணிகளும் நடை பெற்றுள்ளன என்பதைக் காணும் போது, எம்மைப் போன்ற மரபான வாழ்க்கையே மனிதனை மனிதனாக வாழ வழி வகுக்கும் என்ற நம்பிக்கையோடு இருப்பவர்களுக்கு உள்ளத்தில் மகிழ்ச்சி தலைதூக்கு கிறது.

சென்ற ஆண்டு வெளிவந்த தமிழ்நூல் ஒன்றுதான் இப் பணியைச் செய்துள்ளது. உடல் நலம் எல்லா நலமும் தரும். எனவே உடல் நலத்தை நாமே பேணுவதற்கும் வழிகாட்டியாகப் பல நூல்கள் வெளிவந்துள்ளன. ஏட்டு வடிவில் எழுதப்பட்டு பின்னர் அச்சு வடிவில் அரங்கேறி இப்போது மின் நூலாக நூல்களும் வளர்ச்சி பெற்றுவிட்டன.

ஆனால் காலத்தின் கட்டளையாகச் சில புதிய நூல்கள் உருவாக்கம் பெறும் பொதுமக்களும் எடுத்துப் படிக்கும் நூலாக ஒரு நூலை இன்று எழுதப் பலர் தயங்குகிறார்கள். நவீன தொழில் நுட்பமும் விஞ்ஞானத்தின் விரைவான வளர்ச்சியும் செயற்கை நுண் ணறிவின் செவ்வாக்கும் சூழ்ந்திருக் கும் நிலையில் ஒரு நூல் உருவாக்கப்பட்டுள்ளது. அந்த நூலின் பெயர் "சிறு நீர்ப்பாதை நோய்கள்" என்பதாகும். மருத்துவநூல் என்பதால் அத்துறையைச் சார்ந்தவர்க்காகவே எழுதப்பட்டிருக்கும் என எண்ணும் நிலையை இந்நூல் முற்றாகப் புறந்தள்ளிவிடும் என்பதில் ஐயமில்லை.

நூலாசிரியர் தனது முன்னுரையிலே ஒரு நல்ல செய்தியை வருமாறு பதிவிட்டுள்ளார்.

"நவீன மருத்துவத் தொழில் நுட்பத்துடன் வளர்ந்து வரும் துறையாக சிறுநீரகவியல் இருப்பதனால் நோயாளர்களிடையே இது பற்றிய தெளிவான பார்வை இருப்பது அவசியமாகிறது. இந்நூல் அதை மேலும் வலுப்படுத்துகிறது."

சிறுநீரகவியல் ஒரு கற்கை நெறியாக இந்நூலில் கட்டமைக்கப் பட்டுள்ளது. அது பற்றிய கற்கையை மேற்கொள்ளாத பொது மக்களும் அறிய வேண்டியவை நூலின் உள்ளடக்கமாக விளக்கப் படங்களுடன் அமைந்திருப்பது, நூலை எடுத்துப் படிக்கத் தோன்றும். பதின்னான்கு சிறிய கட்டுரைகள்.

தெளிவான தமிழ்மொழிநடை, ஆங்கில மருந்துச் சொற்களுக்கான தமிழ்க் கலைச் சொற்கள், தனது உடல்நிலையைத் தானே அறிந்து கொள்ளக்கூடியது தொடர்பான அத்தியாயங்கள்.

முழுநூலும் முன்னுரையும் சேர 91 பக்கங்கள். ஒரு நாளில் படித்து முடிக்கக் கூடிய கால அளவு. வைத்தியர் நேரில் நின்று வழி காட்டுவது போல பயிற்சிமுறை கள். இவை யாவும் நூலைப் பற்றி மற்றவருக்கு உரைக்க உதவும் தகவல்கள்.

நூலாசிரியர் மருத்துவர் பா.பாலகோபி மருத்துவத்துறைக்கு மக்களை ஆற்றுப்படுத்தியுள்ளார். சிறுநீரக நோய் மக்களிடையே மறைவாக வைக்கப் படும் ஒரு நோயாகவும் இருந்தது. இந்த நூல் அத்தகையவர் தனியாக இருந்து படித்து நோயிலிருந்து விடுபடவும் நோய்வராமல் மற்றவர்களைக் காக்கவும் ஒரு மருந்து என்பதே என் உறுதியான கருத்து.

**முனைவர் ச.மனோன்மணி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திஸ்ஸ விகாரையை வைத்து அரசியல் ஆதாயம் தேட வேண்டாம்!



## விரைவில் தீர்வு என்கிறார் நீதி அமைச்சர்

(கொழும்பு) ..........................................

**தையிட்டியை வைத்து அரசியல் ஆதாயம் தேடும் நோக்கம் எமக்குக் கிடையாது. தமிழ் அரசியல்வாதிகள் உள்ளிட்ட எதிர்க்கட்சியினரும் இந்த விவகாரத்தை வைத்து அரசியல் ஆதாயம் தேட முயற்சிப்பதை நிறுத்த வேண்டும். தையிட்டி திஸ்ஸ விகாரை மற்றும் அங்குள்ள மக்களின் காணிகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.**

அத்துடன், காணியின் உரிமையாளர்கள், அரசியல்வாதிகளின் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் செயற்படாது பொறுமை காக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

இது தையிட்டி காணி உரிமையாளர்களுக்கும் திஸ்ஸ விகாரையின் விகாராதிபதிக்கும் இடையிலான பிரச்சினை. இதில் வேறு தரப்பினர் தலையிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

இந்தப் பிரச்சினைக்கு மேற்படி இரு தரப்புகளும் பேச்சு நடத்தித் தீர்வு காண வேண்டும். இது இலகுவான காரியம். எமது அரசு இந்த விடயத்தில் ஆழ்ந்த கரிசனை செலுத்தியுள்ளது. இரு தரப்புகளும் இணக்கத்துக்கு வருவதற்கான வழிவகைகளை அரசின் விசாரணைக் குழு செய்யும்.

எனவே, தையிட்டி திஸ்ஸ விகாரை மற்றும் அங்குள்ள மக்களின் காணிகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு மிக விரைவில் தீர்வு காணப்படும் என்று உறுதியளிக்கின்றோம்.

இந்த விவகாரத்தில் வேறு தரப்பினர் தலையிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொள்வதுடன் தையிட்டி காணி உரிமையாளர்கள் பொறுமை காக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றோம் எனவும் தெரிவித்தார். (நி)


## கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 23.12.1947 — மறைவு 05.01.2026

எமது நண்பன் மணிவண்ணன் அவர்களின் அன்புத் தாயார்

அமரர். **விஸ்வலிங்கம் சிவஞானவதியார்**

அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயர் அடைகின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் உற்றார், உறவினர்கள் அனைவருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(6493)

நண்பர்கள்
யாழ்.இந்துக் கல்லூரி 2002 A/L

## யாழ்.மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

**ஆண்டுப் பொதுக்கூட்டமும்**
**புதிய நிர்வாகத் தெரிவும் - 2026**

**காலம் : 08.02.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணி**
**இடம் : கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபம்.**
**தலைமை : திரு.செ.ஜெயக்குமார் (சங்கத் தலைவர்)**

**குறிப்பு :**
மேற்படி சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் 08.02.2026 அன்று நடாத்த தீர்மானித்திருப்பதால் அங்கத்தவர் பிரேரணைகள் இருப்பின் தங்கள் பிரேரணைகளை 26.01.2026 திங்கட்கிழமைக்கு முன்னதாக சங்கக் காரியாலய முகவரிக்கு செயலாளர் என அனுப்பி வைக்கவும். அத்துடன் அங்கத்தவர் பிள்ளைகள் பல்கலைக்கழக அனுமதி, 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றிருப்பின் அவற்றின் விபரங்களினை சங்கக் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**இருபாலை வீதி,**
**கோண்டாவில் கிழக்கு,**
**கோண்டாவில்.**

(C-4749)

**செயலாளர்**
**க.செல்வச்சந்திரன்.**




# திருவாசக விருந்து காரைநகர் ஈழத்து சிதம்பரம் மாணிக்கவாசகர் மடாலயத்தில் (07.01.2026)

**பிறவிதனை அறமாற்றிப் பிணி மூப்பென்ற இவை இரண்டும்**
**உறவி னொடும் ஒழியச் சென்று உலகுடைய ஒரு முதலைச்**
**செறிபொழில் சூழ் தில்லை நகர்த் திருச்சிற்றம்பலம் மன்னி**
**மறையவரும் வானவரும் வணங்கிட நான் கண்டேனே.**


திருவாசகம்

மாணிக்கவாசகர் தில்லையில் இறைவனைக் கண்டார் நாமும் திண்ணபுரத்தில் கூத்தப் பெருமானைக் காண்போம்.பிறவி முற்றிலும் மாறப்பெற்று நோய், முதிர்ச்சி என்பவை இரண்டும் சுற்றத்தார் பற்றினோடு நீங்கும் படியாகிப் போய் உலகத்தை உடைய ஒப்பற்ற முதல்வனை தில்லையில் விண்ணவரும், வேதியரும் வழிபடுவதை மாணிக்கவாசகர் கண்ட அருள் காட்சியை ஈழத்துச் சிதம்பரம் ஆலயத்தில் திண்ணபுரத்தில் தரிசிப்போம்.

தில்லைக்காட்சி திண்ணபுரத்தில் காண்போம்.

நாளையதினம் (07.01.2026) திருவாசகம் காரை நகர் மடாலயத்தில் முற்றோதல் ஓதி படிப்பவர் மனத்தையும் பரவசப்படுத்தியும், உயிர் தன் தன்மை கெட்டுச் சிவத் தன்மையாகவும், அலைகின்ற மனத்திற்கு ஓய்வளிக்கவும். அருளை வாரி வழங்கும் கற்பகர். திருவாசகத்தேன் விருந்து ஆன்மாவின் அறியாமையையும், ஆசை ஆகிய பந்தங்களிலிருந்து நீங்கவும், சிவ அறிவுக் கண்திறக்கவும், வஞ்சக வழிகளிலிருந்து விலக்கி அன்பு நெறியில் அழை [illegible]. அன்பே சிவம் ஆகும்.

உலக சிவ ஆலயங்களில் திருவம்பாவை ஓதியும், தில்லைக்கூத்தருக்கு ஆதிரை விழாச் சிறப்பாகவும், மாணிக்கவாசகர் மடாலயம் 100 ஆவது வருடம் பூர்த்தியாகியும், ஈழத்துச் சிதம்பரம் கும்பாபிஷேகம் நடக்கவும், உலக சைவ மக்கள் அனைவருக்கும் நலன் கருதியும் மடாலயத்தில் இறைவனுக்கு நன்றியுடன் திருவாசகம் ஓதுவோம் வாரீர்.



**க.கு.க.சிவபாலன்**
**சிவநெறிப்புரவலர்**
**பாஞ்சசண்யம்**


(C-4751)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## நைஜீரியாவில் படகு கவிழ்ந்து விபத்து

- 25 பேர் உயிரிழப்பு
- 14 பேர் மாயம்
- தேடுதல் பணிகள் தீவிரம்



(அபுஜா)

நைஜீரியாவின் வடகிழக்கு மாநிலமான யோப்பில் பயணிகள் படகு கவிழ்ந்து 25 பேர் பலியான நிலையில், 14 பேரைக் காணவில்லை என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஜிகாவா மாநிலத்தில் உள்ள அதியானி கிராமத்தில் இருந்து புறப்பட்ட படகு, யோப் மாநிலத்தில் உள்ள கார்பிக்கு சென்று கொண்டிருந்தது.

அப்போது, திடீரென படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

படகில் 52 பேர் பயணம் செய்துள்ளனர்.

இதில் குறைந்தது 25 பயணிகள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இது வரை 13 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

25 உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

மாயமான 14 பேரை தேடும்பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது என யோப் மாநில அவசரநிலை மேலாண்மை ஏஜென்சி தலைவர் தெரிவித்துள்ளார்.

படகில் காணப்பட்ட துளை ஊடாக படகு நீரில் மூழ்கியதாக ஜிகாவா மாநில பொலிசார் தெரிவித்துள்ளனர். (3)

## கிறீன்லாந்தை கை...

## எந்த உரி...

### ட்ரம்பிற்கு டென்ம...


(மொஸ்கோ) ---------

**"கிறீன்லாந்தை கைப்பற்றுவ... அச்சுறுத்லை நிறுத்துங்கள்" என்... பிரதமர் டொனால்ட் ட்ரம்பிட... விடுத்துள்ளார்.**

அமெரிக்கா இராணுவ நடவடிக்கை மூலம் வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவியைக் கைது செய்து நாடு கடத்தி நியூயோர்... சிறையில் அடைத்துள்ளது. இ... நிலையில், ட்ரம்ப்புக்கு மிகவு... நெருக்கமான, ஸ்டீபன் மில்ல... என்பவரின் மனைவி காதே மில்லர்...

## தொடரூந்து நிலையத்தில் பாரிய தீ விபத்து

### தீக்கிரையான 200இற்கும் மேற்பட்ட உந்துருளிகள்



(கேரளா)

இந்தியாவின் கேரள மாநிலம் திரிச்சூர் தொடருந்து நிலையத்தில் நேற்று முன்தினம் அதிகாலை ஏற்பட்ட பெரும் தீப்பரவலில், அங்குள்ள வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த 200 இற்கும் மேற்பட்ட உந்துருளிகள் முழுமையாக தீக்கிரையாகியுள்ளன.

திரிச்சூர் தொடருந்து நிலையத்தின் 2 ஆவது நடைமேடைக்கு அருகில் உள்ள வாகன நிறுத்துமிடத்தில் காலை 6:15 அளவில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டது.

முதலில் ஒரு சில உந்துருளிகளில் ஏற்பட்ட தீப்பரவல், வாகனங்களில் இருந்த எரிபொருள் காரணமாக சில நிமிடங்களிலேயே அருகிலிருந்த நூற்றுக்கணக்கான வாகனங்களுக்கும் அதிவேகமாகப் பரவியது.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்புப் படையினர், சுமார் அரை மணி நேரத்துக்கும் மேலாகப் போராடி தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

எனினும், வாகனங்கள் மிக நெருக்கமாக நிறுத்தப்பட்டிருந்ததாலும், எரிபொருள் கசிவினாலும் தீயைத் தடுப்பதில் கடும் சவால் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலத்த சத்தத்துடன் எரிபொருள் தாங்கிகள் வெடித்துச் சிதறியதால் அந்தப் பகுதி முழுவதும் கரும்புகை சூழ்ந்து காணப்பட்டது.

அங்கு 500 வாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்ததாகவும் அவற்றில் சுமார் 200இற்கும் மேற்பட்ட வாகனங்கள் தீக்கிரையாகியுள்ளதாகவும் முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.


அதிஷ்டவசமாக இந்த விபத்தில் எவருக்கும் உயிர்ச்சேதமோ அல்லது காயங்களோ ஏற்படவில்லை.

தொடருந்து நிலையத்தின் பயணச்சீட்டுக் கருமபீடம் மற்றும் மேற்கூரை சேதமடைந்த போதிலும், தொடருந்து சேவைகள் எவ்வித பாதிப்புமின்றி வழக்கம் போல் இயங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சாரக் கசிவு காரணமாகவோ அல்லது மின்சாரக் கம்பியில் ஏற்பட்ட தீப்பொறி விழுந்ததாலோ இந்த விபத்து நேர்ந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் நிலையில் மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன. (3)

## அமெரிக்...

### அடுத்த இலக்கு...



(வோஷிங்டன்)

வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவி ஆகியோர் அமெரிக்க இராணுவ நடவடிக்கையின் மூலம் சிறைபிடிக்கப்பட்டது.

ஒரு நாளுக்குப் பிறகு, அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் மார்க்கோ ரூபியோ கியூபாவிற்கு மீண்டும் ஒரு எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இதன்படி மதுரோவின் அரசாங்கத்திற்குக் கியூபா ஆதர...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...கப்பற்றுவதற்கு அமெரிக்காவிற்கு ...மையும் கிடையாது!

## ...மார்க் பிரதமர் பதிலடி

...வது தொடர்பான ...ன்று டென்மார்க் ...டம் எச்சரிக்கை



...பார்க் ... இந் ...கவும் ...ல்லர் ...ல்லர், சமூக ஊடகத்தில் கிறீன்லாந்து வரைபடத்தை அமெரிக்கக் கொடியுடன் வெளியிட்டு, அடுத்து விரைவில் எனக்கூறியிருந்தார்.

இது தொடர்பாக டென்மார்க் பிரதமர் கேத்தே பிரெட்ரிக்சன் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: அமெரிக்காவிடம் நேரடியாக சொல்லிக் கொள்கிறேன். கிறீன்லாந்துடன் இணைந்து டென்மார்க் நேட்டோவில் உறுப்பு நாடாக உள்ளது. அந்த அமைப்பின் பாதுகாப்பு உத்தரவாதத்தை பெற்றுள்ளது. கிறீன்லாந்து தொடர்பாக அமெரிக்காவுடன் ஒப்பந்தம் போட்டுள்ளோம்.

கிறீன்லாந்து என்பது டென்மார்க் கட்டுப்பாட்டில் உள்ளது.

இதனைப் பாதுகாப்பு காரணங்களுக்காக தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் வலியுறுத்தி உள்ளார்.

ஆனால், அதனை ஒப்படைக்க முடியாது என டென்மார்க் திட்டவட்டமாக கூறிவிட்டது. இருப்பினும் அந்தத் தீவை தொடர்ந்து அமெரிக்கா கோரி வருகிறது. டென்மார்க் பிரதமர் பேட்டியைத் தொடர்ந்து சில மணி நேரங்களுக்கு பிறகு ட்ரம்ப் கூறுகையில், தேசியப் பாதுகாப்பு கண்ணோட்டத்தில் கிறீன்லாந்து நமக்கு தேவைப்படுகிறது. ஆனால், டென்மார்க்கால் அதனை செய்ய முடியாது எனக் கூறினார். (3)

# ...க்காவின் ...கு கியூபாவா?



வளித்து வந்ததாக ரூபியோ குற்றம் சாட்டியுள்ளார்.

இதன் காரணமாகக் கியூபா "கடுமையான விளைவுகளை" சந்திக்க நேரிடும் என்று அவர் தெரிவித்தார்.

சர்வதேச ஊடக மொன்றுக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், வோஷிங்டன் அடுத்தகட்டமாக என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பது குறித்து விரிவாகப் பேச அவர் மறுத்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகத்தால் ஒரு தீர்க்கமான நடவடிக்கையாக விவரிக்கப்படும்.

இந்த இராணுவ நடவடிக்கைக்குப் பிறகு, பிராந்தியத்தில் பதற்றம் அதிகரித்துள்ளது.

அமெரிக்க அதிகாரிகள் கியூபா மீது இதுவரை எந்த குறிப்பிட்ட நடவடிக்கையையும் அறிவிக்கவில்லை.

அதேபோல், ரூபியோவின் இந்த கருத்துக்களுக்குக் கியூபா அரசாங்கம் இன்னும் பகிரங்கமாகப் பதில் அளிக்கவில்லை.

"கியூபாவின் ஆட்சி முறை மீது எங்களுக்கு நல்ல அபிப்பிராயம் இல்லை என்பது இரகசியமல்ல.

உண்மையில் மதுரோவை இவ்வளவு காலம் முட்டுக்கொடுத்துத் தாங்கிப் பிடித்ததே அவர்கள்தான்," என்று ரூபியோ அழுத்தமாகக் குறிப்பிட்டார். (3)

# வெனிசூலா நாட்டின் இறையாண்மை பாதுகாக்கப்பட வேண்டும்

## பாப்பரசர் 14ஆம் லியோ

வெனிசுலா சுதந்திரமாக செயற்பட இடமளிக்க வேண்டும் என பாப்பரசர் 14ஆம் லியோ வலியுறுத்தியுள்ளார்.

வெனிசுலா மீது திடீர் தாக்குதல் நடத்திய அமெரிக்கா, அந்நாட்டு ஜனாதிபதி நிகோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவியைச் சிறை பிடித்தது. அவர்கள் அமெரிக்காவுக்கு நாடு கடத்தப்பட்டதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்தார்.

வெனிசுலாவில் பதற்றமான சூழல் நிலவுவதால் அங்கு அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.


ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவியை அமெரிக்கப் படைகள் கைது செய்துள்ளது சர்வதேச அளவில் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், ரோம் நகரின் செயின்ட் பீட்டர் சதுக்கத்தில் திரண்டிருந்த மக்களிடையே போப் லியோ உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது: இந்த இக்கட்டான சூழ்நிலையில் வெனிசுலாவில் அமைதி திரும்பவும், அந்நாட்டின் தன்னாட்சி அதிகாரம் பாதுகாக்கப்பட வேண்டும்.

புவிசார் அரசியல் நிலைகளைவிட வெனிசுலா மக்களின் நலன் அனைத்தையும் விட மேலானதாக இருக்க வேண்டும்.

வன்முறையை கைவிட்டு விட்டு நாடு அமைதி மற்றும் நீதியில் பயணிக்க வேண்டும்.

இந்த நெருக்கடியால் வெனிசுலாவில் ஏற்பட்டுள்ள மனிதாபிமான மற்றும் சட்ட ரீதியான பாதிப்புகள் குறித்து கவலை தெரிவித்தார். (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு புதிய உதவிப் பிரதேச செயலாளர்



கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு புதிய உதவிப் பிரதேச செயலாளராக செல்வரட்ணம் சாருதர்ஷன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் நேற்றைய தினம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபனிடம் தமக்கான நியமனக் கடிதத்தினைப் பெற்றுக்கொண்டார்.

அத்துடன் அன்றைய தினமே கரவெட்டி பிரதேச செயலகத்தில் தமது கடமையினைப் பொறுப்பேற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1989- இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: - 30
சூரி செவ் 11 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:- BSC (IT) Soft Ware Engineer (Pvt)
எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள படித்த பெண்
தொ.இ: B/14085

பிறப்பு:1991 -இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
உயரம்:5'9"
தகைமை/தொழில்- BA (Computer Oprator)
எதிர்பார்ப்பு: படித்த குணமுள்ள பெண்
தொ.இ: B/14078

பிறப்பு:1986-இந்து
நட்சத்திரம்:அத்தம்
கி-பா-45 1/2
2 இல் செவ்
உயரம்:5'6"
தகைமை/தொழில்:A/L, Ambulance Driver
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: B/16119

பிறப்பு: 1982- இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
உயரம்:6'2"
தகைமை/தொழில்: O/L, Manager
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16122

பிறப்பு:1990-இந்து
நட்சத்திரம்:ரோகினி
கி.பா:16
உயரம்:5'6"
தகைமை/தொழில்: CIMA,Assistant manager(pvt)
எதிர்பார்ப்பு: IT, Accountant.Doctor, Engineer
தொ.இ: B/14581

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-2000 - NRC
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: Management, HRM, HNDA
எதிர்பார்ப்பு - வெளிநாடு
தொ.இ: G/15314

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்-உத்தராடம்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Dip in ICT
எதிர்பார்ப்பு: வெளிநாடு, அரச உத்தியோகம்
தொ.இ: G/16134

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம்-அத்தம்
2 இல் செவ்
கி.பா -23
உயரம்-5"4"
தகைமை/தொழில்: BSC, PHD, QA
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/16137

பிறப்பு-1987-RC
உயரம்: 5'2"
தகைமை/தொழில் - A/L, Care Taker
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/16138

பிறப்பு:1996-இந்து
நட்சத்திரம்: கேட்டை
12 இல் சூரி செவ்
கி.பா - 03
உயரம்: 5'2"
தகைமை/தொழில் - MBBS
எதிர்பார்ப்பு: Doctor
தொ.இ: G/16142

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 513

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## நாலு வழிகள்!

ஒரு ராஜா இருந்தால் இன்னொரு ராஜாவிடம் சண்டை போடுவதற்கான சந்தர்ப்பம் வரத்தான் செய்யும்.

தன்னுடைய நாட்டுக்குத் தொத்தரவு ஏற்படும் போது தற்காப்புக்காக தேசத்தைக் காப்பாற்றுவதற்காக சண்டை போட வேண்டி வரும்.

அடுத்த நாட்டிலே அதர்மம் அதிகமாக இருந்தால் அதர்மத்தை நிலை நாட்டுவதற்காக சண்டைக்கு போகிறவர்களும் உண்டு. அந்தக் காலத்திலே தன்னுடைய நாட்டின் எல்லையை விரிவுபடுத்துவதற்காக அதாவது ராஜ்ய விஸ்தரிப்புக்காகவே சண்டைக்குப் போகிறவர்களும் உண்டு. அப்படி யுத்தம் ஆரம்பிக்க வேண்டும் என்றால் நேரடியாக போரிலே இறங்குவதில்லை. படிப்படியாக நான்கு வழியைத் தாண்ட வேண்டும். நான்காவது வழிதான் போர்.

முதல் மூன்று வழியைக் கடைப்பிடித்துப் பார்க்க வேண்டும். அது மூன்றும் சரியாக வரவில்லை என்றால் தான் நான்காவது வழியைக் கடைப்பிடிக்க வேண்டுமாம்.

அர்த்த சாஸ்திரமும் தர்ம சாஸ்திரமும் இதை "உபாய சதுஷ்டயம்" என்று சொல்லுது. அதாவது நான்கு வழிகள். ஸாம் தான பேத தண்டம் என்று சொல்கிறோம். அதுதான் இந்த நான்கு வழிகள். ஸாமம் தானம், பேதம், தண்டம்.

ராஜா இன்னொரு ராஜாவிடம் படையெடுக்க வேண்டும் என்று முடிவு செய்துவிட்டால் முதலிலே கடைப்பிடிக்க வேண்டிய வழி "ஸாமம்".

முதலிலே அந்த ராஜாவிடம் அன்போடு பழகி அவனை அடங்கிவரச் செய்ய முடியுமா என்று பார்க்க வேண்டும். வேண்டியவர்களைக் கொண்டு அவனுக்கு நல்ல வார்த்தைகளைச் சொல்லச் செய்ய வேண்டும்.

மனதிலே அமைதியோடு அதற்கான முயற்சியிலே ஈடுபட வேண்டும். அதுதான் "ஸாமம்"! இரண்டாவது வழி என்ன?

தானம்! அதாவது நாம் தான் ராஜா. இன்னொரு ராஜாவிடம் போர் செய்யப் போகிறோம் என்று வையுங்கள்.

தமக்குப் பிரியமான பொருளை அவனுக்குக் கொடுத்து "என்னுடைய இராஜ்ஜியத்தோடு சேர்த்துவிடுகிறாயா?" என்று கேட்க வேண்டும். அவன் படையெடுத்துக் கொண்டுவந்தால் இப்படி எதையாவது கொ்டுத்து அவனைத் திரும்பிப் போக வைப்பது.

இராஜ்ஜியத்திலே ஒரு சின்னப் பகுதியைச் சண்டை இல்லாமலே கொடுத்து விடுவது அல்லது தனதான்யங்களை கொடுப்பது இல்லை என்றால் ராஜகுமாரியையே எதிராளி ராஜாவுக்கோ, ராஜகுமாரனுக்கோ கல்யாணம் செய்து கொடுத்து (கன்யாதானம்) அவன்கூட சண்டை இல்லாமலே சுமூக உறவை ஏற்படுத்துவது. இதெல்லாம் தானோபாயம்.

ஸாமம் என்பது அன்பினாலே மனதை மாற்றுவது, தானம் என்பது பொருள் கொடுத்து மனதை மாற்றுவது அதனாலே அதைவிட இது கொஞ்சம் மட்டம்தான். மூன்றாவது வரும் "பேதம்" இருக்கிறதே. அது இதைவிட இன்னும் கொஞ்சம் மட்டம்.

பேதத்தை ஒரு உபாயமாக கையாள்வது பேதோபாயம். இந்த உபாயத்தை வாழ்க்கை விடயங்களிலே பின்பற்றக்கூடாது. பேதமும் தண்டமும் இராஜாங்கத்திற்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்ற உபாயங்கள்.

Divide & Rule என்று சொல்கிறார்கள். பிரித்தாளுவது! அதுதான் பேதாபாயம்.

எதிரி முகாமிலே பிளவை ஏற்படுத்தி, அதனாலே அவனுக்கு ஆதரவு குறையும் மாதிரி செய்வது அவனுடைய பலத்தைக் குறைத்து இப்போது எனக்கு அடங்குகிறாயா? என்று கேட்டு கப்பம் கட்ட வைக்கிறது.

இதிலே கூட ஒரு தார்மிகக் கட்டுப்பாடு வைத்திருக்கிறார்கள் பாருங்கள். அதாவது எதிரிக்கு பலம் குறைந்த நிலையிலேயும் அவன் பணிந்து வருகின்றானா என்று பார்த்துவிட்டு அதற்கும் வரவில்லை என்றால்தான் யுத்தம் சாம - தான - பேத - தண்டத்திலே நான்காவதாக வருதே தண்டம் அதுதான் யுத்தம்.

கொஞ்சம் யோசித்துப் பார்த்தால் இப்போதும்கூட உள்நாட்டு விவகாரங்களிலே இந்த நான்கு வழியையும் பயன்படுத்துகிறோம்.

மக்களுக்கு நல்ல விடயங்களை எடுத்துச் சொல்வது ஸாமம். அவர்களுக்கு சலுகைகள் காட்டுவது தானம்.

குற்றவாளிகளிலே ஒருத்தனையே அப்ரூவராக ஆக்கிக்கொண்டு குற்றத்தை நிரூபணம் செய்வது பேதம். கடைசியாக குற்றவாளிக்குக் கொடுக்கிற தண்டனைதான் தண்டம். இப்படி ஸாம - தான- பேத - தண்டம் என்பதற்கான சாஸ்திர விளக்கம் கொடுத்திருக்கிறார் ஒரு பெரியவர். அந்தக் காலத்து ராஜாக்கள் படை எடுக்க வேண்டும் என்றால் கூட எப்படி ஒரு வழிமுறையை வகுத்திருக்கிறார்கள் பாருங்கள். அதிலேயும் சில வித்தியாச மான ராஜாக்கள் உண்டு.

ஒரு ராஜா. அப்படித்தான் ஒருநாள் சாவகாசமாக அரண்மனையிலே உட்கார்ந்திருந்தார். படைத்தளபதி அவசரமாக ஓடி வருகிறார். "அரசே, பக்கத்துத் தேசத்து மன்னன் படையெடுத்து வந்து கொண்டிருக்கிறான். என்ன செய்யலாம் சொல்லுங்கள்!" என்று கேட்கிறார். ராஜா கொஞ்சம் நிதானமாக யோசனை செய்து பார்த்துவிட்டு, "உடனே என்னை எங்கேயாவது பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு போங்கள்!" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனவு இல்லம் மெய்ப்பட (பகுதி 14)

# வீட்டுக்குள் வெள்ளம்

IESL VC

Dream House

**1.0 அறிமுகம்**

கனவு இல்லத்தை கட்டிமுடித்து மகிழ்ச்சியாக வாழ்ந்து கொண்டிருக்கும் தருணத்தில் மழை வெள்ளம் வீட்டுக்குள் புகுந்தால் எப்படி இருக்கும்? அந்த நிலைமை தற்போது பலருக்கு ஏற்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக நகரத்தில் வாழ்பவர்களுக்கு இந்நிலைமை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இனிவரும் காலத்திலும் மேற்படி நிலைமைகள் தொடரக் கூடிய வாய்ப்புக்கள் அதிகம். எனவே இனி வரும்காலத்தில் வீடு கட்டுபவர்கள் மேற்படி விடயத்தை கருத்தில் கொள்ளவேண்டும். வீடு கட்டி வாழ்பவர்கள் என்ன செய்ய வேண்டுமென்ற தெளிவினை பெற்றுக் கொள்ளவேண்டும்.

**2.0 பருவ மழையும் புயல் மழையும்**

பருவ மழை என்பது சீராக பெய்கின்ற மழை.அவ்வாறான மழையினையே பெற்று வந்தோம். அதன் அடிப்படையிலேயே எமது கட்டுமானங்களுக்கான திட்டமிடல் களையும் செய்துவந்தோம்/செய்து வருகின்றோம்.ஆனால் தற்போது பருவ மழை பொய்த்துவிட்டது. புயல் மழையே எமக்கு கிடைக்கிறது. அதாவது மழை நாட்களின் எண்ணிக்கை குறைவடைந்து சீரான மழையாக இல்லாமல் குறிப்பிட்ட நாளில் அல்லது குறிப்பிட்ட கால நேரத்திற்குள் அதிகளவான மழை பெய்கின்ற நிலைமையே காணப்படுகிறது, அதாவது காலநிலை மாற்றம் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்ற காலத்திற்குள் நிற்கின்றோம்.

**3.0 வெள்ளம் வீட்டுக்குள் உட்புகுதல்**


காலநிலை மாற்றத்தின் விளைவாக தற்போது புயல் மழையே நமக்கு கிடைக்கிறது. குறைந்த நேர அவகாசத்திற்குள் கூடிய மழைவீழ்ச்சி கிடைக்கிறது. இதன் விளைவாக வெள்ளம் வீட்டுக்குள் உட்புகுகின்ற சூழல் உருவாகிறது. இதற்கான காரணங்களாக பின்வருவன அமைகின்றன.

**3.1 நகரமயமாக்கலும் திட்டமிடப்படாத அபிவிருத்தியும்**

வெறும் காணிகளிலெல்லாம் கட்டிடங்கள் முளைத்துவிட்டன. நீர் நிற்கின்ற இடங்கள் கூட ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டன. வெள்ளநீர் வழிந்தோடும் வழிகள் மறிக்கப்பட்டுவிட்டன. வெள்ள வாய்க்கால்கள் மூடப்பட்டுவிட்டன. அனைவரும் வீடுகளை சுற்றி மதில்கள் கட்டியுள்ளதால் வெள்ளம் ஓடுவதற்கான வழிகள் தடுக்கப்பட்டுவிட்டன.எனவே வீடுகளில் நீர் தேங்குவதற்கான வாய்ப்பு அதிகரித்திருக்கிறது.

**3.2 வீதிகள் மற்றும் புகையிரத பாதைகளின் புனரமைப்பு**

கடந்த தசாப்த காலங்களில் வீதிகள் மற்றும் புகையிரத பாதைகள் புனரமைக்கப்பட்டன. புனரமைக்கும் போது முன்னர் இருந்த உயரத்தைவிட கணிசமான உயரம் கூடுதலாகவே அமைக்கப்பட்டிருக்கின்றன, வழமையாக வீடு கட்டும் போது வீதியின் உயரத்தைவிட அத்திவார மட்டத்தை உயரமாக அமைக்கும் வழக்கம் உண்டு. தற்போது பல வீடுகளின் அத்திவாரமட்டம் பதிவாக




இருப்பதை கண்டுகொள்ள முடியும். வீடுகளுக்குள் வெள்ளம் புகுவதில் இதுவும் ஒரு பங்காக இருக்கிறது.


**3.3 நிலத்தடிக்கு நீர் உட்புகும் வசதியின்மை**

இன்றைய சூழலில் கட்டப்படும் அல்லது மேம்படுத்தப்படும் வீடுகளில் மழை நீரானது நிலத்தடிக்கு உட்புகாதவாறான அமைப்பே ஏற்படுத்தப்படுகின்றன. அதாவது வீட்டைச்சுற்றி கொங்கீரிட் போடுதல் / கொங்கீரிட் கற்கள் பதித்தல் செயற்பாட்டையே செய்கின்றோம். மழை நீர் வழிந்தோடுவதற்கான வழிகளும் தடுக்கப்பட்ட நிலையில் மழை நீர் நிலத்தடிக்கும் ஊடுபுகுவதற்கான வாய்ப்பும் தடுக்கப்பட்டால் இறுதியில் என்ன நடக்கும்? வெள்ளம் வீட்டுக்குள்தானே புகுந்துகொள்ளும்.

**3.4 அதிகளவான மழைவீழ்ச்சியும் வெள்ள நிலைமையும்**

அதிகளவான மழை வீழ்ச்சி குறிப்பிட்ட நேரத்திற்குள் கிடைக்கின்றதென்பதை பார்த்தோம் அத்துடன் வெள்ளநீர் வழிந்தோடும் வழிகளும் தடுக்கப்பட்டிருக்கின்றதென்பதை பார்த்தோம். இதனை இன்னும் கொஞ்சம் விரிவாகப் பார்ப்போம் .

150 மில்லி மீற்றர் (ஆறு இஞ்சி அளவுக்கு) மழை கிடைக்கிறதென்று வைத்துக் கொள்வோம். காணியில் 80 வீதமான பரப்பில் வீடு இருக்கிறது. முற்றம் மற்றும் வீடல்லாத வெளிப்பகுதி 20 வீதமாக இருக்கிறது. வீட்டுக்கு மேலே விழுகின்ற மழையும் முற்றத்திற்கே/ வெளிப்பகுதிக்கே வரும். நான்கு மடங்கு மழை நீர் வெளிப்பகுதிக்கு வரும். வெளிப் பகுதியில் தற்போது 750 மில்லி மீற்றர் (இரண்டு அரை அடி) உயரத்திற்கு நீரமட்டம் உயரும். உயர்ந்தால் வெளியே போவதற்கான வாய்ப்பு இல்லாதபோது வீட்டுக்குள் தானே புகுந்து கொள்ளும். இதுவே தற்போது நடைபெறுகின்றன.




**4.0 வெள்ளம் புகுதலை எவ்வாறு தடுக்கலாம்?**

தற்கால காலநிலை மாற்றத்தில் வீட்டுக்குள் வெள்ளம் புகுவது தவிர்க்கமுடியாததென்று ஏற்றுக்கொண்டு வாழ முடியாது. அதற்கான தீர்வினை நோக்கி நாம் நம்மை தயார்படுத்திக்கொள்ளவேண்டும். பின்வரும் வழிகள் நிச்சயமாக கைகொடுக்கும்.

**4.1 அத்திவார மட்டத்தை** (DPC Level) **உயர்வாக பேணுதல்**

புதிதாக வீடு காட்டும் போது அல்லது மேம்படுத்தல் வேலைகளை செய்யும் பொழுது அத்திவார மட்டம் (DPC Level) வீதியின் உயரத்தைவிட உயரமாக இருப்பதை உறுதிசெய்யவேண்டும். குறைந்த பட்சம் ஒரு அடியாவது உயரமாக இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

**4.2 நீர் உட்புகும் நிலஅமைப்பை பேணுதல்**

வீட்டின் முற்றம் மற்றும் வெளிப்பகுதி அழகாக இருக்கவேண்டும் , அதனை ஏற்றுக்கொள்கின்றோம். அவை மழை நீரினை நிலத்தடிக்கு ஊடுகடத்தும் வகையில் இருக்கவேண்டும். அந்தவகையில் நிலத்திற்கு நீர் ஊடுருவும் வகையில் அழகாக கற்களை பதிக்கும் வகைகள் தற்போது உண்டு. வெளி நிலத்திற்கு கொங்கிரீட் போடுவதை தவிர்த்து நீரானது உட்புகும் வண்ணம் அமைப்புக்களை மேற்கொள்ள வேண்டும்.

**4.3 நீர் ஊடுருவும் அமைப்புகள்** (Recharging Wells)

நிலத்தடிக்கு நீர் உட்புகும் வகையில் பல விடயங்களை தற்போது செய்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது. தற்போது மாநகர சபைகள்/நகரசபைகள்/ பிரதேச சபைகள் இவற்றினை சிபாரிசு செய்கின்றன. இதற்கான துணை விதிகளும் கட்டிட ஒழுங்கு விதிகளும் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகின்றன.

வீட்டின் மிகவும் பள்ளமான பகுதில் நீர் ஊடுருவும் வகையில் ஒரு கிடங்கு வெட்டி அதற்கும் நீர் வடிகட்டும் அமைப்பினை மேற்கொண்டு நிலத்தடிக்கு ஊடுருவும் வழி செய்யலாம் (Recharging Wells). வெளியில் பார்ப்பதற்கு அழகாக இருக்கும் ஆனால் மழைநீரினை நிலத்தடிக்கு உட்புக செய்யும் பல விடயங்கள் இன்று செய்யமுடியும்.

வீட்டுக்கூரையில் இருந்து வருகின்ற நீரினை வடிகட்டி சேமிக்க முடியும் (Rain water Harvesting) அத்துடன் வடிகட்டிய நீரினை எமது கிணற்றுக்குள்ளும் செலுத்த முடியும் இப்படியான ஏற்பாடுகள் பல இடங்களில் செய்யப்படுகின்றன.

**5.0 சிபாரிசும் முடிவுரையும்**

நீருக்கு நாம் மதிப்பளித்து நடக்கும்போது நீர் நமக்கு தீங்களிப்பதில்லை என்கிற இயற்கையின் விதியினையும் நாம் புரிந்து கொண்டு நீரினை நிலத்திற்கு ஊடுகடத்தவும் நீரினை சேமிக்கவும் ஏற்பாடுகள் செய்யும்பொழுது வெள்ள அனர்த்தம் நமக்கு ஏற்படாமல் எமது வீடுகளை பாதுகாத்துக் கொள்ள முடியுமென்பதை புரிந்துகொள்ளுங்கள். மேலே குறிப்பிட்ட நீரைச் சேமிக்கும் வழிகளை உங்கள் வீடுகளில் கடைப்பிடிக்க தொடங்குங்கள். எந்தக் கால நிலை மாற்றமும் உங்களைப் பாதிக்காது.

**இலங்கை பொறியியலாளர்கள் சங்கம்,**
**வடக்கின் அத்தியாயம்.**

# இராசிபலன்

**06.01.2026**
**மார்கழி 22 , செவ்வாய்க்கிழமை**
**திருதியை பிற்பகல் 12.22 மணிவரை**
**ஆயில்யம் பிற்பகல் 4.37 மணிவரை**

**சுபநேரம் 11.01-12.31 மணிவரை**
**இராகுகாலம் 3.31-5.01 மணிவரை**
**சங்கடகர சதுர்த்தி விரதம்**

**சந்திராஷ்டமம்- பூராடம்,உத்தராடம்.**

**வளவன்**

**மேஷம்:** அழகு சாதனப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**கடகம்:** சிந்தனை மிகுதியான நாள், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**துலாம்:** கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், வீடுகட்டும பணியில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், ஆரோக்கியம் சீராகும்.

**மகரம்:** அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்:** மூத்த சகோதரர்கள் உங்களின் நலனில் அதிக அக்கறை காட்ட முற்படுவர், தொழில் போட்டிகள் மாறும், வங்கிச் சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள்.

**சிம்மம்:** பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், விருந்தினர்கள் வருகையால் சுப விரயங்கள் ஏற்படலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், மனச்சஞ்சலங்கள் சற்றுக்கூடும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், விருந்தினர் வருகையுண்டு, பயணங்களால் பலனுன்டு.

**கும்பம்:** கூட்டுத் தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும், கடன் சுமை குறைய வழி வகை செய்வீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி சமாளிப்பீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்களால் பலனுண்டு, பணப்புழக்கம் கூடும் நாள்.

**கன்னி:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**தனுசு:** தொழிலில் கூடுதல் விழிப்புணர்வு அவசியம்,வழிபாட்டால் மேன்மை காண வேண்டிய நாள், பொறுமையால் பெருமைகளை காண வேண்டிய நாள், ரோக பயமுண்டு.

**மீனம்:** பாராட்டும் புகழும் கூடும் நாள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், தாழ்ந்த சுபாவமுண்டு, தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**தாயும் தந்தையும் செல்லாத பாதையில் நீ செல்லாதே**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 948





"ஐயா! என்னுடைய விருப்பமும் அதுதான் ஆனால் இந்த ஒரு தடவை மட்டும் தாங்கள் என்னைப் பிரிந்து தஞ்சைபுரிக்குப் போய் வாருங்கள்."

"இது என்ன பிடிவாதம்? எதற்காக இந்தத் தடவை மட்டும் நான் உன்னை இங்கே விட்டுவிட்டுப் போக வேண்டும்?" என்று பழுவேட்டரையர் கேட்டபோது அவருடைய புருவங்கள் நெரிந்தன.

"சுவாமி! அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. என்னை நீங்கள் இப்போது தங்களுடன் அழைத்துப் போனால் இந்த மூடர்கள் மேலும் நம்மைக் குறித்துப் பரிகசித்துச் சிரிப்பார்கள். 'கிழவருக்கு இளைய ராணியிடம் அவ்வளவு நம்பிக்கை!' என்று சொல்லுவார்கள். அதை நினைத்தாலே எனக்கு ரத்தம் கொதிக்கிறது. மற்றொரு காரணம் இன்னும் முக்கியமானது சம்புவரையரைத் தங்களுடைய அத்தியந்த சிநேகிதர் என்று இத்தனை காலமும் தாங்கள் சொல்லி வந்தீர்கள். நம்பியும் வந்தீர்கள். ஆனால் இளவரசர் வந்ததிலிருந்து அவருடைய பேச்சிலும், நடவடிக்கைகளிலும் ஏற்பட்டிருக்கும் மாறுதலைக் கவனித்தீர்களா? தாங்கள் கவனிக்காவிட்டாலும் நான் கவனித்துக் கொண்டு வருகிறேன்."

"நானும் அதைக் கவனித்துத்தான் வருகிறேன். அந்த மாறுதலுக்குக் காரணம் என்ன வாயிருக்குமென்று ஆச்சரியப் பட்டுக்கொண்டிருக்கிறேன்."

"தாங்கள் கபடமற்ற உள்ளமுடையவர் ஆகையால் ஆச்சரியப்படுகிறீர்கள். எனக்கு அதில் ஆச்சரியம் இல்லை. மனிதர்களுடைய பேராசை இயல்புதான், சம்புவரையரின் மாறுதலுக்குக் காரணம். இளவரசர் ஆதித்த கரிகாலர் பெண்களை முகமெடுத்தே திருமணமே செய்து கொள்ளப் போவதில்லையென்றும் வதந்தியாயிருந்தது. இங்கு அவர் வந்ததிலிருந்து அதற்கு நேர்மாறாக நடந்து வருவதைப் பார்த்திருப்பீர்கள். பெண்கள் இருக்குமிடத்துக்கு அடிக்கடி வருகிறார், கொஞ்சிக் கொஞ்சிப் பேசுகிறார். இதற்கெல்லாம் காரணம் சம்புவரையர் மகள் மணிமேகலை மீது அவருடைய மனது சென்றிருப்பதுதான். 'மணிமேகலையை வேட்டையாடுவதற்கு அழைத்துப் போகலாமா' என்று கூடக் கரிகாலர் கேட்டார் அல்லவா? இது சம்புவரையருக்கும் தெரிந்திருக்கிறது. ஆகையால் பழைய ஏற்பாடுகளையெல்லாம் அவர் மறந்து விட்டார். தம் அருமை மகள் தஞ்சாவூர்த் தங்கச் சிங்காதனத்தில் வீற்றிருக்கப் போவது பற்றிக் கனவு காணத் தொடங்கி விட்டார்."

"ஆமாம் நீ சொல்லுவதுதான் காரணமாயிருக்க வேண்டும். சம்புவரையன் இத்தகைய நீச குணம் படைத்தவன் என்று நான் கனவிலும் எண்ணவில்லை. இரண்டு மாதங்களுக்கு முன்பு தான் இதே மாளிகையில் மதுராந்தகரைத் தஞ்சைச் சிம்மாதனத்தில் ஏற்றிவைப்பதாக எல்லோரும் கூடிச் சபதம் செய்தோம். சீச்சீ! இப்படிப் பேச்சுத் தவறுகிறவனும் ஒரு மனிதனா?" என்று பழுவேட்டரையர் சீறினார்.


"சுவாமி! அதனாலேதான் நான் தங்களுடன் வரவில்லை என்று சொல்கிறேன்.

தொடரும்...



# சிறுவர் அரங்கம்

## உழைப்பே உயர்வு தரும்



ஒரு ஊரிலே ஒரு ராஜா. அவர் மிகவும் இரக்க குணம் உள்ளவர். கர்ணனைப் போல் தானும் ஏழைகளுக்கு தான தர்மங்கள் செய்து இறந்த பின் இறைவனிடம் சேர வேண்டும் என்பது அவருடைய ஆசை.

ஒவ்வொரு நாளும் தன் அரச கடமைகளைச் செய்வதற்கு முன் ஏழைகளுக்கு தானம் வழங்கிவிட்டுத் தான் அரச கடமைகளை செய்வார். அரண்மனைக்கு முன்னால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏழை மக்கள் அரசனிடம் தானம் பெறுவதற்காக வரிசையில் காத்திருப்பார்கள். அரசனும் சாமி அறையிலே பூஜைகளை முடித்துவிட்டு ஏழைகளுக்குத் தானம் வழங்குவார். அந்த மக்கள் அரசனைப் பணிந்து நன்றி சொல்லி தானம் பெற்றுக் கொள்வார்கள். தன் மன்னுடைய இந்த செயற்பாட்டால் மனம் நெகிழ்ந்து போன அமைச்சர் தன் மன்னனுடைய பெருமையை அயல் நாடுகளிடம் உள்ள மன்னர் பெருமக்கள் எல்லோருக்கும் தெரியப்படுத்த வேண்டும் என்று விரும்பினார். தன் விருப்பத்தை மன்னனிடம் தெரிவித்தார். மன்னனும் சந்தோசப்பட்டு அவனுக்கு செலவுக்கு பொற்காசுகளும் நாலு, ஐந்து குதிரைப் படைவீரர்களும் துணைக்கு கொடுத்து அனுப்பினான்.

அமைச்சரும் படைவீரர்களும் முதலில் பக்கத்து நாட்டிற்கு சென்றார்கள். அங்கு அவர்களுக்கு மிகப் பெரிய வரவேற்பு அளிக்கப்பட்டது. விருந்து, உபசாரங்கள் எல்லாம் அபரிதமாக இருந்தது. விருந்து உண்டு விட்டு ஓய்வு மண்டபத்திலே இரு நாட்டு அமைச்சர்களும் நாட்டு நடப்புகள் பற்றி அளவளாவினர். பின்பு தன்னுடைய மன்னனின் பெருமைகள் பற்றியும், ஏழை மக்களுக்கு தன் மன்னன் செய்யும் தான தர்மங்கள் பற்றியும் அந்த நாட்டு அமைச்சரிடம் பெருமையாக கூறினான். அதற்கு அந்த நாட்டு அமைச்சரும் தன்னுடைய நாட்டு மன்னனின் பெருமைகளையும், தங்கள் நாட்டு மன்னனும் அவ்வாறே ஏழை மக்களுக்கு தான , தர் மங்கள் செய்வதாகவும் கூறினான்.

"அப்படியா" என்று கேட்டு அமைச்சரும் சந்தோசமாக அந்த நாட்டு அமைச்சரிடம் கைகுலுக்கி விடை பெற்றார். இப்படியே பல நாடுகளுக்கும் அமைச்சர் குழாமினர் சென்றனர் கடைசியில் ஒரு நாட்டுக்குச் சென்றனர்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய இழுவைப்படகுகளின் அடாவடியால் மீனவர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறி

## ரவிகரன் எம்.பி சுட்டிக்காட்டு

யுத்தத்தினால் ஏற்கனவே கடுமையாகப் பாதிக்கப்பட்ட வடபகுதி மீனவர்கள், தற்போது இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறிய செயற்பாடுகளால் தமது அன்றாட வாழ்வாதாரத்தை இழந்து பாரிய இடர்பாடுகளை எதிர்நோக்கி வருவதாக சுட்டிக்காட்டிய வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்தை முற்றாகச் சிதைக்கின்ற இந்திய இழுவைப்படகுகளின் வருகையை உடனடியாக கட்டுப்படுத்துமாறு கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரிடம் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கில் யாழ்ப்பாணம், தீவகம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களின் கடற்பரப்புக்களில் இந்திய இழுவைப்படகுகளின் அடாவடித்தனமான செயற்பாடுகள் அதிகரித்துள்ளமை,

குறிப்பாக வடபகுதி கடற்பரப்பில் கடற்கரைகளை அண்மித்து இந்திய இழுவைப்படகுகள் இழுவைமடித் தொழிலில் ஈடுபட்டு கடல்வளங்களை சூறையாடுவதுடன், வடபகுதி மீனவர்களின் கடற்றொழில் உபகரணங்களை சேதப்படுத்திச் செல்கின்றமை தொடர்பிலும்ரவிகரன் எம்.பியால் இதன்போது கடற்றொழில் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய வருகையை கட்டுப்படுத்துவதில் இலங்கை அரசிற்கு இராஜதந்திர ரீதியான சிக்கல்நிலை இருந்தாலும், வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரப் பாதிப்பு நிலையை கருத்திற்கொண்டு இந்திய இழுவைப்படகுகளைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்தார். (ம-7,250)

தவறுகளில் தேங்கிக்கிடப்பதே முன்னேற்றத்திற்கான முக்கிய தடையாகும்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பழைய ஆசிரியர்களும் புதிய கல்விச்சீர்திருத்தமும்

கல்விக் கொள்கை தொடர்பில் காலத்துக்குக் காலம் மாற்றங்களை ஏற்படுத்துவது நல்லதாயினும் ஆட்சி மாற்றங்காரணமாக கல்விச் சீர்திருத்தம் ஏற்படுவதென்பது அவ்வளவு ஆரோக்கியமானதல்ல.

எது எவ்வாறாயினும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் புதிய கல்விச் சீர்திருத்தத்தைக் கொண்டு வந்துள்ளது. அதன் பிரகாரம் புதிய பாடத்திட்டம் 2026 கல்வியாண்டில் நடைமுறைக்கு வரும் என பிரதமரும் கல்வி அமைச்சருமாகிய ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நல்லது. இங்குதான் நாம் ஒரு விடயத்தைக் கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது, கல்விச் சீர்திருத்தம் என்பது தனித்து பாடத்திட்டங்களை மாற்றியமைப்பது மட்டுமல்ல. மாறாக வகுப்பறைகளில் கற்றல் உபகரணங்களின் பயன்பாடுகள் – வகுப்பறை முகாமைத்துவம் – பாடசாலையின் ஏனைய வளங்கள் – அவற்றுக்கான ஒதுக்கீடுகள் எனப் பல்வேறு விடயங்கள் அதற்குள் உள்ளடங்கியுள்ளன.

பொதுவில் பாடசாலைக் கல்விக்காக முன்பு ஒதுக்கப்பட்ட வளங்களைவிட, தற்போது பாடசாலைகளுக்கான வள ஒதுக்கீடுகள் திருப்தியாக உள்ளதெனக் கூறமுடியும்.

ஆம், முன்பு கற்றல் செயற்பாட்டுக்குத் தேவையான வெண்கட்டியைப் பெற்றுக் கொள்வதில் கூட, அன்றைய அதிபர்கள் கடும் இடர்பாடுகளை எதிர்கொண்டனர்.

எனினும் அன்றைய கல்வித் தரம் மிக உயர்வாகவும் பண்புத் தர விருத்தி கொண்டதாகவும் இருந்தது.

ஆனால் தற்போது ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் ஒதுக்கப்படுகின்ற தர உள்ளீட்டுக்கான நிதி என்பது ஒரு பாடசாலை தனது அடிப்படைத் தேவைகளையும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் போதுமானதாக உள்ளது.

தவிர, இதற்கும் அப்பால் பாடசாலை மாணவர்களுக்கான இலவச உணவு என்பது மாணவர்கள் பசியுடன் கல்வி கற்கின்ற அவலத்தை அடியோடு இல்லாது செய்துள்ளது.

இந்நிலையில் சமகாலத்தில் பாடசாலைக் கல்வி என்பது திருப்திகரமானதாக ஆற்றப்பட வேண்டும்.

இருந்தும் இப்போது பாடசாலைகளை விட, தனியார் கல்வி நிறுவனங்கள் மீதே மாணவர்களும் பெற்றோர்களும் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

மேலும் இலங்கையின் வரவு செலவுத் திட்டத்தில் இலவசக்கல்வி, இலவச பாடநூல், இலவச சீருடை, இலவச உணவு என்பவற்றுக்கான நிதி ஒதுக்கீடு மிகக் கணிசமானதாக இருந்தும் பாடசாலைக் கல்வி தனது இலக்கை அடையத் தவறியுள்ளதென்பது குறித்து, உரிய ஆய்வுகள் செய்யப்பட வேண்டும்.

அதாவது பாடசாலைக் கல்விக்கு அப்பால், தனியார் கல்வி நிறுவனங்களை நாட வேண்டிய தேவை என்ன என்ற கேள்வி எழுகிறது.

இங்குதான் கல்விச்சீர்திருத்தங்கள் தேவை என்பது அந்தக் கேள்விக்கான பதிலாக இருந்தாலும் ஆசிரியர்களே கல்வியைப் போதிப்பவர்கள் என்பதால் ஆசிரியர்களின் அறிவு, திறன், மனப்பாங்கில் நேரிய மாற்றங்கள் ஏற்படுவது மிகவும் கட்டாயமாகிறது.

ஆசிரியர்களின் மனப்பாங்கில் ஏற்படுகின்ற நேர்க்கணிய மாற்றங்களே கல்விச் சீர்திருத்தத்தின் நோக்கை எட்டுவதற்கு மிகவும் அவசியம் என்ற உண்மை உணரப்பட வேண்டும்.

## சிறுமி டினோஜா விவகாரம்

# மூன்று முக்கிய பரிந்துரைகளுடன் இடைக்கால அறிக்கை சமர்ப்பிப்பு

முல்லைத்தீவு சிலாவத்தை பகுதியை சேர்ந்த 12 வயது சிறுமி டினோஜா முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் ஆரம்பகட்ட புலனாய்வு விசாரணையை நடத்திய நிபுணர்கள் குழுவின் இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 21 ஆம் திகதி உணவு ஒவ்வாமை காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட குறித்த சிறுமி உயிரிழந்த நிலையில் சிறுமிக்கு உரிய முறையில் மருத்துவம் வழங்கப்படவில்லை என உறவினர்கள் குற்றஞ்சாட்டினர்.

இந்தநிலையில், சம்பவம் தொடர்பான விசாரணைக்காக, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் நிபுணர்கள் குழுவொன்று நியமிக்கப்பட்டு, விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையிலேயே,

மூன்றம்ச பரிந்துரைகளுடன் குறித்த இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் சமன் பத்திரன தெரிவித்தார்.

குறித்த இடைக்கால அறிக்கையில் சம்பவத்தின் போது, மருத்துவமனை அறிக்கையில் குளறுபடிகள் ஏற்பட்டிருக்கலாம் என கருதும் பட்சத்தில் அது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்தல்.

அவசர சிகிச்சைப் பிரிவில் குறித்த நேரத்தில் கடமையில் இருந்த தாதி உத்தியோகத்தரை, சாதாரண நோயாளர் விடுதிக்கு மாற்றுதல்.

அத்துடன் சம்பவம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள மருத்துவரை, தனியாக செயற்பட விடாது, மற்றுமொருவரின் கண்காணிப்பின் கீழ் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் ஆகிய பரிந்துரைகளை நிபுணர்கள் குழு முன்வைத்துள்ளது.

சம்பவம் தொடர்பான முழுமையான விசாரணை அறிக்கை எதிர்வரும் ஒரு வார காலத்திற்குள் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்ப்பதாகவும் முழுமையான அறிக்கை கிடைத்ததன் பின்னரே முறைமைசார் விசாரணைக்கான பணிப்புரைகளை விடுவிக்க முடியும் எனவும், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## அதிக பயணிகள் : அதி வேகம்

# மதுபோதையில் பேருந்தை செலுத்திய சாரதி கைது

*(ஊர்காவற்றுறை)*

யாழ் - ஊர்காவற்றுறை வீதியின் அல்லைப்பிட்டிப் பகுதியில் அதிக வேகத்தில் பயணித்த பேருந்து ஒன்றினை வழிமறித்து சோதனையிட்ட ஊர்காவற்றுறை பொலிஸார் மதுபோதையில் பேருந்தைச் செலுத தியகுற்றச்சாட்டில் சாரதியைக் கைது செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பேருந்து அதிவேகத்தில் அதிகளவான பயணிகளுடன் செல்வதை அவதானித்த ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையப் போக்குவரத்து பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் அணியினர் பேருந்தை வழிமறித்து சோதனையிட்டுள்ளனர்.

சோதனையின் போது சாரதியிடம் சாரதி அனுமதிப் பத்திரம் இல்லாதிருந்துள்ளதுடன் சாரதி மது போதையில் இருந்தமையும் உறுதிசெய்யப்பட்டதை அடுத்து அவர் அதிரடியாகக் கைது செய்யப்பட்டார்.

ஊர்காவற்றுறை பொலிஸாரின் துரித நடவடிக்கையால் பலரின் உயிர் காப்பாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# மதுபோதையில் மது கடத்தியவர் கைது

*(ஊர்காவற்றுறை)*

ஊர்காவற்றுறை கண்ணகி அம்மன் துறைமுகப் பகுதியில் நேற்று (5) சட்டவிரோத விற்பனையில் ஈடுபடும் நோக்குடன் சூட்சுமமான முறையில் 13 மதுப் போத்தல்களை கொண்டு சென்றஒருவர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் பிரஸ்தாப நபர் மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தி வந்ததும் உறுதி செய்யப்பட்டுள்ளதை அடுத்து அவர் இருவேறு குற்றங்களின் கீழ் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

வரையறையை விட அதிக மதுப்போத்தல்களை மேலதிகமாக கொண்டுசெல்ல குறித்த நபர் முற்பட்டுள்ளதாகவும், குறித்த மதுசாரம் அனலைதீவில் சட்டவிரோத வியாபார நடவடிக்கைக்காகவே கொண்டுசெல்லப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேநேரம் தீவகப்பகுதியில் அரச அனுமதி பெற்ற மதுக்கள் சட்டவிரோதமான முறையில் விற்பனை செய்யப்படுவதாகவும் இதனால் பல குடும்பங்கள் பாதிக்கப்படுவதாகவும், இதைக் கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பொது அமைப்புகளும் பிரதேச சபை உறுப்பினர்களும் வலியுறுத்தி வந்த நிலையில் நேற்று குறித்த கைது இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டு பலன்கள் - 2026

## புதிய மாற்றம் உண்டாகும்



**உயர்வான எண்ணம் கொண்ட விருச்சிக இராசியினரே.... எதையும் வெல்லக் கூடிய ஆற்றல் மிகுந்த விருச்சிக இராசியினருக்கு 2026 ஆம் ஆண்டு நல்ல வாய்ப்புகளைப் பெறக்கூடிய ஆண்டாக அமைய நல் வாழ்த்துக்கள்.**

2026 ஆம் ஆண்டின் முற்பகுதியில் சில சங்கடங்கள் தோன்றினாலும் பிற்பகுதி நல்ல வாய்ப்புகளை வழங்கும். உங்களுக்கு முட்டுக்கட்டையாக இருந்த எதிர்ப்புகள் அகலும். எதையும் சமாளிக்கும் சக்தி உண்டாகும். விரைந்து வேகமாக செயற்படுவீர்கள். தொட்டது துலங்கும். பட்டது பூக்கும். புதிய மாற்றம் உண்டாகும். சம்பாதிக்கும் பணத்தில் உபரியாகும் இலாபத்தை முறையாக சேமித்து வைத்துக் கொண்டால் கிரக சூழ்நிலை சாதகமற்று இருக்கும் காலங்களில் நிம்மதியாக இருக்க முடியும்.

**குருவின் சஞ்சார பலன்கள்:**

மே மாதம் 2026 வரை குரு பகவான் அஷ்டம ஸ்தானத்தில் நிற்பார். ஜூன் 2 ஆம் திகதி முதல் பாக்கிய ஸ்தானத்தில் நின்று பலன் தருவார். 2026 ஆம் ஆண்டு விருச்சிக இராசியினருக்கு விட்டதை மீட்டு பிடிக்கும் காலமாகும். உங்களிடம் புதிய தெளிவு பிறக்கும். அறிவாற்றல் மேம்படும்.

பொன், பொருள் சேர்க்கை அதிகரிக்கும். அஷ்டம குரு காலத்தில் விலகிச் சென்ற உறவுகள் மீண்டும் நட்பு பாராட்டுவார்கள். அஷ்டம குருவால் ஏற்பட்ட பாதிப்புகள் குறையும். பாக்கிய ஸ்தான குரு பகவான் இடமாற்றத்தை தந்து அதன் மூலம் நல்ல பலன்களை வழங்குவார். ஒருவர் வருமானத்தில் தள்ளாடிய குடும்பம் பிள்ளைகளின் வருமானத்தில் உயர்ந்து நிற்கும். வராத கடன்கள் வசூலாகும்.

தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டாகி கடனை அடைக்கக் கூடிய சூழ்நிலைகள் உருவாகும். வீடு வாகன யோகம் என வளமான வாழ்க்கையை வாழப் போகிறீர்கள். நாலு பேருக்கு உதவி செய்து சமூக மரியாதையை அதிகரிப்பீர்கள். அரசு சார்ந்த துறை மூலம் உங்களுக்கு ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து மருமகன், மருமகள் வரும் நேரம் இது. சுய உழைப்பினால் வெற்றியை தக்க வைத்துக் கொள்வீர்கள். வருமானம் உயர்வதால் வீட்டிலும் வெளியிலும் செல்வாக்கு உயரும். பெற்றோர்கள், பெரியோர்கள், முன்னோர்களின் நல்லாசிகள் கிடைக்கும். தேவையற்ற வார்த்தைகளை, வாக்குவாதங்களைக் குறைத்தால் குடும்பத்தில் நிம்மதி நிலைக்கும்.

**சனியின் சஞ்சார பலன்கள்:**

இந்த ஆண்டு முழுவதும் சனி பகவான் பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிப்பார். உயர்வுகள் உண்டாகும் வருடமாக இது இருக்கும். புதிய தொழில் எண்ணங்கள் வரும். அதை செயற்படுத்தக்கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகும். சில நேரங்களில் விரய செலவுகள் இருந்தாலும் அதை சமாளிக்கக் கூடிய அளவில் வருவாயும் இருக்கும். மாணவர்கள் விரும்பிய பாடத்திட்டத்தில் இணைந்து படிப்பீர்கள்.

காதல் திருமணத்திற்கு பெற்றோர்கள் சம்மதம் கிடைக்கும். சொந்த வீடு, வாகனம், அழகு ஆடம்பரப் பொருட்கள் என வாழ்க்கை இன்பமயமாக மாறும். எதிர்பார்த்த வெளிநாட்டு குடியுரிமை கிடைக்கும். திருமணம் ஆன தம்பதிகள் குடும்ப சூழ்நிலைக்கு ஏற்ப விட்டுக் கொடுத்துச் சென்றால் வாழ்க்கை இன்பமாகும். சுய ஜாதக வலிமைக்கு ஏற்ப திருமண முயற்சியில் ஈடுபடலாம்.

முதல் திருமணத்தில் தோல்வி அடைந்தவர்களுக்கு மறு விவாகம் நடக்கும். எதிர்பார்த்த வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் கிடைக்கும். சிலர் பணியில் இருந்து விலகிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகும். சொந்தங்களையும் சுற்றி இருப்பவர்களையும் பகைத்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது. ராகு கேதுவின் மையப்புள்ளியில் இராசியும் 7 ஆம் இடமும் இருப்பதால் சுய ஜாதக பரிசீலனைக்குப் பிறகு திருமணம் தொடர்பான முடிவு எடுப்பது நல்லது.

**ராகு கேதுவின் சஞ்சார பலன்கள்:**

ஆண்டின் தொடக்கத்தில் ராகு பகவான் சுக ஸ்தானத்திலும் கேது பகவான் தொழில் ஸ்தானத்திலும் சஞ்சரிப்பார்கள். 5.12.2026 முதல் ராகு பகவான் மூன்றாம் இடமான முயற்சி ஸ்தானத்திலும் கேது பகவான் 9ஆம் இடமான பாக்கிய ஸ்தானத்திலும் சஞ்சரிப்பார்கள். பத்தில் ஒரு பாவி இருக்க வேண்டும் என்பது பழமொழி. திட்டமிட்டுச் செயற்படுவது அவசியம். உபரி இலாபத்தை அரசு நிதி நிறுவனங்களில் சேமிப்பது முக்கியம்.

அல்லது வீடு வாகனம் என சுப விரயமாக மாற்றுவது உங்கள் கடமையில் உள்ளது. மேலும் திருமணம் தொடர்பான விடயங்களில் சற்றுப் பொறுமையாக இருப்பது நல்லது. எந்த புதிய முயற்சிகளையும் எடுத்தோம் கவிழ்த்தோம் என்று செய்யாமல் இருந்தால் வருட கிரகங்களால் பாதிப்பு ஏற்படாது. சந்தோஷத்தில் கிடைக்கும் அனுபவத்தை விட வலியில் கிடைக்கும் அனுபவத்திற்கு பலம் அதிகம். கடந்த சில மாதங்களாக அனுபவ பாடத்தை சனி ராகு கேதுக்கள் கற்றுக் கொடுத்து வருகிறார்கள்.

கடவுள் கெட்டவர்களை சோதிக்க மாட்டார். சோதனைக் காலங்களில் காப்பாற்ற மாட்டார். நல்லவர்களை அதிகம் சோதிப்பார். ஆனால் கைவிட மாட்டார். எனவே கவலை வேண்டாம்.




**விசாகம் 4**

செல்வாக்கு, அந்தஸ்து உயரும் வருடம். இந்த வருடம் முழுவதும் இதுவரை கடனால் ஏற்பட்ட பாதிப்புகள் சிறிது சிறிதாக குறையத் தொடங்கும். வட்டிக்கு வட்டி கட்டிய நிலையில் இருந்து மீள தொடங்குவீர்கள். உங்களின் தனித்திறமையால் குடும்பத்தை உயர்த்துவீர்கள். முன்னேற்ற பாதை தென்படும். புதுப்பொலிவு உண்டாகும். பிள்ளைகளால் ஏற்பட்ட மனச்சங்கடங்கள் அகலும். பூர்வீகச் சொத்துக்களில் நிலவிய சங்கடங்கள் விலகும்.

உங்கள் பங்குச் சொத்து முறையாக வந்து சேரும். மனதில் நினைத்ததை செயற்படுத்தக் கூடிய வகையில் சொல்வாக்கு, செல்வாக்கு உயரும். ஆரோக்கியத்தில் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு உரிய வைத்தியம் கிடைக்கும். மனதிற்குப் பிடித்த நல்ல வரன் அமையும். சிலருக்கு புதிய தொழில் தொடங்கும் எண்ணம் உருவாகும். பார்க்கும் வேலையை மாற்றக்கூடாது. சந்தர்ப்பம் அமையும் போது காமாட்சியை வழிபட நிலையான செல்வாக்கு உண்டாகும்.

**அனுஷம்:**

கோட்ச்சார கிரகங்கள் சாதகமாக இருப்பதால் உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். நம்பிக்கை அதிகரிக்கும். சேமிப்பு, சிக்கனத்தில் கவனம் செலுத்த வேண்டிய காலம். வேலை இழந்தவர்களுக்கு புதிய வேலை கிடைக்கும். சக ஊழியர்களுடன் நிலவிய பிணக்குகள் மறையும். தொழில், வியாபாரத்தில் நிலவிய போட்டி, பொறாமைகளை சமாளிப்பீர்கள்.

விவசாயிகள் ஏற்றம் பெறுவார்கள். கொடுத்த கடன்கள் வசூலாகும். திருமணம் மற்றும் புத்திர பாக்கியத்தில் நிலவிய தடைகள் அகலும். வீடு, வாகன, சொத்து யோகம் உண்டாகும். இந்த வருடம் முழுவதும் ஆனந்தமும் மகிழ்ச்சியும் உண்டாகும். திடீர் அதிஷ்டம், இலாபம் உங்களை மகிழ்விக்கும். பிள்ளைகளுக்கு உத்தியோகம், திருமணம் சுப நிகழ்வு போன்ற நல்ல விடயங்கள் நடக்கும். வாழ்க்கைத்துணையின் ஆரோக்கியக் குறைபாடு அகலும்.

சிலருக்கு இளைய சகோதரரால் தொழில் விரயம், முடக்கம், வில்லங்கம் ஏற்படலாம். சுப மங்களப் பொருட்கள் சேர்க்கை அதிகரிக்கும். அநாவசிய வைத்தியச் செலவு இருக்காது. புகுந்த வீட்டாருடன் நிலவிய கருத்து வேறுபாடு மறையும். சாதகமும் பாதகமும் நிறைந்த காலம் என்பதால் சிந்தித்து செயற்படுவது நல்லது.

**கேட்டை:**

தடை, தாமதங்கள் விலகி நினைத்ததை நிறைவேற்றக் கூடிய சந்தர்ப்பம் கூடிவரும். பொருளாதார நிலை சீராகும். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்ற நிலை மறையும்.

பற்றாக்குறை வருமானத்தில் சொற்ப சம்பளத்தில் குடும்பத்தை நடத்தியவர்களுக்கு பணம் எனும் தனம் சமூக அந்தஸ்து பெற்றுத் தரும். ராஜமரியாதை கிடைக்கும். உங்கள் முயற்சியால் வெற்றியும், சாதனையும் படைப்பீர்கள்.

கொடுக்கல் வாங்கல் சுமூகமாக நடைபெறும். தாய், தந்தை, உடன் பிறந்தவர்கள் மற்றும் பெற்ற மக்களால் பெருமை சேரும். கடன் பெற்றாவது வீடு, வாகன யோகம் கிடைக்கப் பெறுவீர்கள். பொதுப் பணியில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும். உற்சாகமான மன நிலை இருப்பதால் வேலையில் இருந்த விரக்தி தன்மை மாறும்.

சிலருக்கு ஆடம்பர வீடு, ஆடம்பர கார் வாங்கும் வாய்ப்பு உண்டு. கௌரவப் பதவிகள் தேடி வரும். தற்காலிக உத்தியோகத்தர்களுக்கு பணி நிரந்தரமாகும். வாழ்கையிலும், தொழில், உத்தியோகத்திலும் முன்னேற்றமான நல்ல மாற்றம் உண்டாகும். பிரதோசத்தன்று பிரதோஷ காலத்தில ஸ்ரீ சரபேஸ்வரரை வழிபடவும்.

**பரிகாரம்:** விருச்சிக ராசியினர் முருகனை வழிபட நிலையான முன்னேற்றங்கள் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹெரோயினுடன்...

செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் - கொழும்புத்துறை பகுதியில் வைத்து 29 மற்றும் 32 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில்,

யாழ்ப்பாணம் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## உயர்தரப்...

கருத்தரங்குகள், மாதிரி வினாத்தாள் அச்சிடல் மற்றும் விநியோகம், பரீட்சை வினாக்களை ஒத்த உள்ளடக்கங்களை விளம்பரப்படுத்துதல் போன்ற அனைத்தும் தடை செய்யப்படும்.

இந்த உத்தரவை மீறுவோர் மீது பரீட்சைகள் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்படும் என்றும், நடத்தப்படாத பாடங்களுக்கான பரீட்சைகள் 2026 ஜனவரி 12 முதல் 20 வரை 2,362 மையங்களில் நடைபெறும் என்றும் பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-7)

## உலங்கு வானூ...

மூலம் யாழுக்கு அழைத்து வரப்பட்டவராவார்.

நாட்டில் நிலவும் மழையுடன் கூடிய காலநிலையால் உண்டான கடல் கொந்தழிப்பு காரணமாக நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையேயான கடல் வழிப் போக்குவரத்து நேற்று மாலை நேர சேவை முற்றாகத் தடைப்பட்டது.

இந்நிலையில் கடல்வழி அம்புலன்ஸ் விரைவு படகும் பயணிக்க முடியாத நிலையில் மேற்படி ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டது. நோயாளரை விரைந்து அனுப்பிவைப்பதில் நெடுந்தீவு வைத்தியசாலை நிர்வாகம் முன்னெடுத்த ஏற்பாடுகளில் நெடுந்தீவு பிரதேச செயலர் மற்றும் உதவி பிரதேச செயலர் ஆகியோர் இணைந்திருந்தனர். (ம-7,33,104)

## கைதானவர்...

யாழ்ப்பாணம் தையிட்டியில் அமைந்துள்ள சட்டவிரோத விகாரை தொடர்பாக போராடியவர்களுக்கு எதிரான வழக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அதன்படி குறித்த வழக்கு விசாரணை எதிர்வரும் பெப்ரவரி 26ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

குறித்த வழக்கு விசாரணை நேற்று (05) மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே வழக்கினை ஒத்திவைத்து நீதிவான் உத்தரவு பிறப்பித்தார்.

தையிட்டியில் அமைந்துள்ள சட்டவிரோதமான திஸ்ஸ விகாரைக்கு முன்பாக போராட்டம் நடத்திய போது வேலன் சுவாமிகள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் உள்ளிட்ட ஐவர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்கள் சொந்தப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், அந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தது.

சந்தேகநபர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், என்.ஸ்ரீகாந்தா, கலாநிதி கே.குருபரன் ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர். (ம-7,33,104)

## எரிபொருள்...

அதன்படி 335 ரூபாயாக இருந்த ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 05 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 340 ரூபாயாகும்.

இதேவேளை 277 ரூபாயாக இருந்த ஓட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 02 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 279 ரூபாயாகும்.

இதேவேளை 318 ரூபாயாக இருந்த சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 05 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 323 ரூபாயாகும்.

மேலும் மண்ணெண்ணெய் 02 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டு 182 ரூபாயாக விற்பனை செய்யப்படவுள்ளது.

ஒக்டேன் 92 ரக பெற்றோலின் விலையில் எந்த மாற்றமும் மேற்கொள்ளப்படாது 294 ரூபாயிற்கே விற்பனை செய்யப்படவுள்ளது. (ம-7)

## வடக்கில் ரஷ்ய...

ரஷ்யத் தூதுவர் லெவன் எஸ்.ஜகாரியனிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் லெவன் எஸ்.ஜகார்யன், வடக்கு மாகாண ஆளுநரை நேற்று திங்கட்கிழமை (05) மாலை, ஆளுநர் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

பல தசாப்தங்களுக்குப் பின்னர் ரஷ்யத் தூதுவர் ஒருவர் யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டமை மகிழ்ச்சியளிப்பதாகக் குறிப்பிட்டு ஆளுநர் அவரை வரவேற்றார்.

இச்சந்திப்பின்போது கருத்துத் தெரிவித்த ரஷ்யத் தூதுவர், "ரஷ்யச் சுற்றுலாவிகள் இலங்கைக்கு அதிகளவில் வருகை தருகின்றனர். எதிர்காலத்தில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் வாய்ப்புள்ளது. எனினும், வடக்கு மாகாணத்துக்கான ரஷ்யச் சுற்றுலாவிகளின் வருகை மிகக்குறைவாகவே உள்ளது.

எனவே, இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கு வரும் ரஷ்யப் பயணிகளை ஈர்க்கும் வகையில் வடக்கு மாகாணம் தனது சுற்றுலாத் திட்டங்களை முன்னெடுப்பது சிறப்பாக அமையும் எனச் சுட்டிக்காட்டினார்.

இதற்குப் பதிலளித்த ஆளுநர், இந்தியாவுடனான நேரடி விமான சேவை காரணமாக அதிகளவான இந்தியச் சுற்றுலாப் பயணிகள் வடக்கு மாகாணத்துக்கு வருகை தருகின்றனர். இதேவேளை வடக்கு மாகாணமானது சுற்றுலாவிகள் தங்கிச் செல்வதற்கு மிகவும் பாதுகாப்பான சூழலைக் கொண்டுள்ளது. இதனைத் தாங்கள் ரஷ்ய மக்களுக்குத் தெரியப்படுத்துவதன் மூலம் அவர்களின் வருகையை அதிகரிக்க உதவ வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

வடக்கு மாகாணத்தின் பொருளாதார வளர்ச்சிக்காக ரஷ்ய முதலீட்டாளர்களை இங்கு முதலீடு செய்வதற்கு ஊக்குவிக்குமாறும் ஆளுநர் இதன்போது கோரிக்கை விடுத்தார்.

தொடர்ந்து, ரஷ்ய கலாசார நிலையம் ஊடாக இலங்கையர்களுக்கு வழங்கப்படும் புலமைப்பரிசில் மற்றும் உயர்கல்வி வாய்ப்புகள் குறித்துத் தெளிவுபடுத்திய தூதுவர், இவ் வாய்ப்புகளை வடக்கு மாகாண மாணவர்களும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். (ம-7)

### மஹஜன சம்பத
திகதி 2026.01.05 | சீட்டிழுப்பு இலக்கம் 6065
C 2 8 8 9 7 2
அத சம்பத: C 8 9 7 2 | சீட்டிழுப்பு இலக்கம் 0640

### சுப தவசக்
2026.01.05 | 181
இடபம் 02 25 57 | 0912

### தன நிதானய
திகதி - 2026.01.05 | சீட்டிழுப்பு இலக்கம் - 2095
W 15 20 43 59 W

### மெகா பவர்
திகதி 05/01/2026 | சீட்டிழுப்பு இலக்கம் 2413
W 15 15 28 61 74

### ஜய
திகதி 2026.01.05 | சீட்டிழுப்பு இலக்கம் 0333
S 4 0 1 5

### கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4307 | சீட்டிழுப்பு திகதி 05.01.2026
L 06 10 25 27 L

### ஹந்தஹன — உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.01.05 | சீட்டிழுப்பு இலக்கம் 1374
தனுசு 09 32 41 56 தனுசு

### உத்தியோகபூர்வ முடிவுகள்
05.01.2026 | வெற்றி வாரம் 0773
B 8 5 8 4 2 1
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.32,129,030.00

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3039 | சீட்டிழுப்பு திகதி 2026.01.05 | தினம் திங்கட்கிழமை
20 34 53 62 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 87,074,824.80

### சனிதா
திகதி 05.01.2026 | வெற்றி வாரம் 5200
34 49 64 77 L
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,200,652.80

### சசிரி
வெற்றி வாரம் 869 | சீட்டிழுப்பு திகதி 05.01.2026 | திங்கட்கிழமை
30 32 33
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,000,000.00

### ராசி
சீட்டிழுப்பு வாரம் 4751 | சீட்டிழுப்பு திகதி 05.01.2026 | தினம் திங்கட்கிழமை
01 06 12 41 ரிஷபம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,113,252.80

### கப்ருக
2215 | 05.01.2026 திங்கட்கிழமை
G 10 12 25 44 56
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.618,161,572.60

### அட கோடிபதி
திங்கட்கிழமை | வெற்றி வாரம் 2865 | சீட்டிழுப்பு திகதி 2026.01.05
14 21 25 38 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.74,719,029.60

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாப்பிள்ளை தேவை

01) வவுனியா - சில்லாலை, இந்து, 1993, திருவாதிரை, Bsc in civil Engneering, Australia, Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 54933

02) நல்லூர், இந்து, 2000, உத்திராடம், BBA Auditor பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 54571

03) யாழ்ப்பாணம், 1996, இந்து, அத்தம், MBBS, Doctor பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 54562

04) கோப்பாய், இந்து, 1997, ரோகினி, Masters in Businees Administration, Bank Exective officer பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 54271

05) சரவணை, இந்து, 1993, அஸ்வினி, Bsc in IT, Singapore Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 54241

06) கரவெட்டி, இந்து, 1988, சுவாதி, Phd in Biochemistry, Germany citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 54321

07) பருத்தித்துறை - யாழ்ப்பாணம், இந்து, 1994, விசாகம், 7 செவ்வாய், A/L, Diploma, Canada Citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 54171

08) வட்டுக்கோட்டை, இந்து, 1995, திருவாதிரை, 7 செவ்வாய், U/Y Degree, Canada, Citizen, Vagitiarion பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 32804

09) கைதடி - மன்னார், Roman cathalic, 1993, A/L, UK Citizen, Divorce பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 46691

10) கொழும்பு, Roman cathalic, 1992, Diploma in IT, Project Manageer, Divorce, Singapore பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. - 39596

எம்மிடம் Roman Catholic மணப்பெண்களும் மாப்பிள்ளைகளும் உண்டு.

நீங்களாகவே எமது website www.thaalee.com இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். (C-4760)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

# ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4758)

076 825 7716 (ஆகாஸ்)

# அம்மன் திருமண சேவை

எம்மிடம் அனைத்து மத ஜாதியினருக்கும் அவரவருக்கு ஏற்ப வரன்களை எம்மிடம் குறுகிய காலத்தில் அமைத்திட நாடவும். (6499)

யாழ்ப்பாண நகர்

077 005 0344, 074 089 1995

# பணிப்பெண் தேவை

பருத்தித்துறை புலோலியில் வயோதிப பெண் ஒருவருக்கு வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலைகள் (முற்றம், வீடு வாசல் கூட்டுதல் , சமையல் ) செய்வதற்கு வேலை செய்ய கூடிய அனுபவமுள்ள பணிப்பெண் தேவை. (1892)

தொடர்புகளுக்கு: 0777 178 486


# விபத்தில் நால்வர் கைது ●●●●●●

திருகோணமலை, அலெக்ஸ் தோட்டப் பகுதியில் இடம்பெற்ற கோர முச்சக்கரவண்டி விபத்தொன்றில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது டன் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னேடுத்து ள்ளனர். (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

# விற்பனைக்கு

பொங்கல் அகப்பை (சிரட்டை) விற்பனைக்கு உண்டு. (6482)

077 210 5286

# யாழ்ப்பாணத்தில் Voyzant

கனடாவை தலைமையகமாகக் கொண்ட உலகளாவிய "வொய்சன்" நிறுவனத்தின் சேவைகள்

- விமான பயணச்சீட்டுக்கள்
- பயணக் காப்புறுதி
- விசா சேவைகள்
- வெளிநாட்டு சுற்றுலா

மேலதிக விபரங்களுக்கு: Voyzant(PVT)Ltd
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
(OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866 (6308)

# வேலையாட்கள் தேவை

வவுனியா / கிளிநொச்சியில் இயங்கி வரும் வெளிநாட்டுப் பொதிகள் சேவை நிறுவனம் மற்றும் புடைவைக் கடை ஒன்றிற்கு முன்னனுபவம் உள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை. (1893)

076 889 1308
077 606 1333

# துப்பரவுப்பணியாளர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு துப்பரவுப் பணியாளர் தேவை. யாழ்.மாநகர சபைக்குட்பட்டோர் விரும்பத்தக்கது.

076 097 3121


# மரண அறிவித்தல்

பிறப்பு 23 - 12 - 1947



இறப்பு 05 - 01 - 2026

## திருமதி சிவஞானவதி விஸ்வலிங்கம்

(ஓய்வுபெற்ற அதிபர் - யாழ். செங்குந்தா இந்துக்கல்லூரி, முன்னாள் அதிபர் - நவாலி மகா வித்தியாலயம்.)

யாழ்ப்பாணம் கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவஞானவதி விஸ்வலிங்கம் அவர்கள் நேற்றுத் திங்கட்கிழமை (05.01.2026) இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு- கனகம்மா தம்பதியினரின் ஏகபுத்திரியும் நடராஜா - நல்லம்மா தம்பதியினரின் மருமகளும் மார்க்கண்டு குமாரசுவாமி (ஓய்வுபெற்ற பிரதம மருந்தாளர், யாழ். போதனாவைத்தியசாலை) அவர்களின் அன்புச் சகோதரியும் நடராஜா விஸ்வலிங்கம் (சட்டத்தரணி) அவர்களின் அன்பு மனைவியும் பிரியதரிசினி (சட்டத்தரணி - கனடா), Dr.சிவதரிசினி (Gp,Australia), கிரிசாந்தி (ஆசிரியை - Khairiya Girls College Colombo) , திருக்குமரன் (சட்டத்தரணி), மணிவண்ணன் (சட்டத்தரணி, முன்னாள் யாழ் மாநகர முதல்வர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் லக்ஸ்மன் (Apotex pharmaceuticals - கனடா), சிவதாசன் (கணக்காளர் - Australia), Dr.ரமேஸ்குமார் (கொழும்பு தேசிய வைத்தியசாலை), கஜபிரியா (சட்டத்தரணி), அபிராமி (விரிவுரையாளர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஹர்சினி (Mc Master University), லக்சிகா (கனடா), கிருத்திக் (Australia), கவிஸ் (Australia) , சாகித்தியா, அபிநயா, லக்கியன், தேனுஜா மற்றும் ஆர்த்திக் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் பரமநாதன் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் புகையிரதத்திணைக்களம்) அவர்களின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.01.2026) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

திருக்குமரன் - 077 967 9597
மணிவண்ணன் - 077 959 9361

(C-4756)

தகவல்: குடும்பத்தினர்
021 222 3153

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 23 . 12 . 1947



மறைவு 05 . 01 . 2026

தமிழ் மக்கள் கூட்டணியின் உப செயலாளரும் (தேர்தல்)
யாழ்.மாநகர சபையின் முன்னாள் முதல்வருமாகிய
விஸ்வலிங்கம் மணிவண்ணன் அவர்களின்
அன்புத் தாயார்

## திருமதி சிவஞானவதி விஸ்வலிங்கம்

அவர்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தமிழ் மக்கள் கூட்டணி. (C-4757)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org